தென்னகத்

# தலைவன்

ஆசிரியர் : தினகரன்

மலர் 1 | 24—2—63 | தி. மு. கழக வார ஏடு | விலை 16 காசு | இதழ் 18




# சரித்திரத் திருட்டு! ஜகத்சாலப் புரட்டு!

## மாஸ்கோ மனிதர்களின் மாயமாலம்!

# மண்டை ஓடுகளின் வரலாறு!

இரும்புத்திரை கொண்ட மாஸ்கோ வரலாற்றை—கருத்துச் சுதந்திரம் பறிக்கும் கம்யூனிஸ்டுகளின் பூர்வாங்கத்தை இந்தக் கட்டுரையில் ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்—இயற்கை எழில் கொஞ்சும் திருவனந்தபுரத்தைச் சார்ந்த நண்பர் இளஞ்சேரன். சர்வாதிகார வெறியர்களின் சரித்திரச் சுருக்கம் இது. குருசாவ் கொள்கையை கோபுரத்திலேற்றி வைத்துக் கொக்கரிக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகளே துணிவிருந்தால் இதற்குப் பதில் சொல்லுங்கள்.




**போலந்தின்** பிரசித்திபெற்ற எழுத்தாளரான **ஹலாஸ்கோ**விடம் பாரீஸ் பத்திரிகைநிருபர் ஒரு கேள்வி கேட்டார்.

“நீங்கள் எப்போதாவது ஒரு கம்யூனிஸ்டாக இருந்திருக்கிறீர்களா?”

ஹலாஸ்கோ அளித்த பதில் இது.

“கம்யூனிஸம் என்ற ஒன்று இல்லவே இல்லை.”

போலந்து அரசு தன்மேல் புயலை ஏவிவிட்டு, தன் நூல்களுக்குத் தடை விதித்து, தன்னை அலையவிட்ட எரிச்சலில் ஹலாஸ்கோ இப்படிப்பதிலளித்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், எழுத்தாளன் என்ற நிலையில் எந்தெந்த சிறப்புகளைப் பெற முடியுமோ, அத்தனையும் பெற்றவர் ஹலாஸ்கோ. போலந்தின் இளைய சமுதாயமே அவரைத்தன் தலைவனாக சுவீகரித்துக் கொள்ளும் அளவுக்கு எழுத்தாற்றல் பெற்ற ஹலாஸ்கோ ஆண்டினார்; இருபத்தி ஐந்து வயதிற்குள் அவர் எழுதிய நூற்களும், திரைப்படங்களும் பெரும் புகழைக் குவித்தன. சலித்துக் கொண்டோ தனக்குரிய புகழ் கிடைக்கவில்லை என்ற ஆத்திரத்திலோ ஹலாஸ்கோ குறிப்பிட்ட ஒரு சித்தாந்தத்தை கேலிசெய்ய வேண்டிய நிலையில் இல்லை.

கடந்த ஒரு நூற்றாண்டாக உலகையே குழப்பி வரும் ஒரு கோட்பாட்டிற்கு, பல முகங்களோடு சிரிக்கும் அதன் முரண்பட்ட அமைப்புக்கு, அளிக்கவேண்டிய விளக்கமே ஹலாஸ்கோவின் பதிலில் ‘இலை மறை காயாக’ இருந்தது.

பிறகு, கம்யூனிஸம் என்பது தான் என்ன?

மார்க்ஸ் வகுத்துவைத்த கோட்பாடுகளில் சில தலைகீழாக நடைமுறையானபோது, சில திருத்தச் சேர்க்கைகளை இணைத்தார் லெனின்.

இதுதான் லெனினிஸம்.

இந்த லெனினிஸத்திற்கும், உலகப் போக்கிற்கும் ஒத்துக் கொள்ளாமல் வந்தபோது ஸ்டாலின் சில புதிய பதிப்புகளை வெளியிட்டார்.

இதன் பெயர் ஸ்டாலினிசம்.

இருபதாம் காங்கிரஸில் குருசேவ் திருவாய் மலர்ந்ததற்குப் பின்னால் இந்த மூன்றாவது ‘இஸத்தை’ ஸ்டாலின் பிணத்தோடு போட்டு புதைத்தாகி விட்டது! அதற்கு முன் உலகெங்கும் உள்ள தோழர்கள், மார்க்ஸீயத்தை நெஞ்சிலும், லெனினிஸத்தைக் கையிலும், ஸ்டாலினிஸத்தை மடியிலும் வைத்துக்கொண்டு அலைந்தார்கள்!

குருசேவின் உக்ரப்பார்வைக்குப் பின்னால், ஸ்டாலினிஸம், சீனத்து மா-சே-துங்கின் சட்டைப் பைக்குள் புகுந்து கொண்டு படாதபாடு படுத்துகிறது.

இப்படியாக, மார்க்ஸீயம் எனும் கோட்பாடு, ‘காலதேச வர்த்தமானங்கள் நிமித்தம்’ நான்காவது ஆச்சார்ய சுவாமிகளான மா-சே-துங்கின் கைகளிலே சிக்கியபோது, இளைத்து ஈளை கட்டி, இன்றோ; நாளையோ என்ற பரிதாபகரமான நிலைக்கு ஆளாகி மரண மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறது...

இந்த கூட்டுக் கலவைதான், ‘கம்யூனிஸம்’ என்ற ‘லேபிள்’ ஒட்டப்பட்டு இன்று காட்சிப் பொருளாக நிற்கிறது.

இதனை எப்படி முழுமை வாய்ந்த, நடைமுறைக்கு ஏற்ற, இலட்சிய வெற்றிக்கான சித்தாந்தமாக ஏற்றுக் கொள்ள முடியும்? இதனையே ஹலாஸ்கோ சுருக்கமாக தெளிவுபடுத்தினார்.

“கம்யூனிஸம் என்ற ஒன்று இல்லவே இல்லை.”

அவதார புருஷர்களின் அசரீரிக்கு ஆழ்வார்கள் பாஷ்யம் வரைவதைப் போல, இன்றைய ‘கம்யூனிஸம்’ ஆகிவிட்டிருக்கிறது.

பகவான் காரல் மார்க்ஸ் என்ன சொன்னார்?

தொழில் முறையில் சீர் பெற்ற நாடுகளில்தான் சமதர்மப்புரட்சி முதன்முதலாகமுளைவிடும் என்றார். நடந்தது என்ன? தொழில் துறையில் மிகமிக பிற்போக்கான நாடான ரஷ்யாவில் ‘யுகப்புரட்சி’ நடந்தது.

இங்கே ஓரளவு மார்க்ஸீயம் பொய்த்துப் போய்விட்டது.

சீனப் புரட்சிக்கு வித்திட்டு, அதனை வெற்றி பெறச் செய்தவர்கள், அங்குள்ள விவசாயிகளே தவிர, தொழிலாளர் வர்க்கமல்ல.

சமதர்மப் புரட்சிக்கும் விவசாயிகளுக்கும் என்ன தொடர்பு? என்று மார்க்ஸே கேட்டிருக்கிறார். விவசாயிகளை அவர் ‘உள்நாட்டு முட்டாள்கள்’ என்று ஆத்திரம்தீரத் திட்டித் தீர்த்திருக்கிறார். இந்த உள்நாட்டு முட்டாள்கள்தான் சீனாவில், மா-சே-துங் அரியாசனம் வர மலர் தூவினார்கள்.

தத்துவ ரீதியாக மார்க்ஸீயம் திரும்பவும் தோற்றுவிட்டது.

கம்யூனிஸம் பரவிய மற்றகிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மார்க்ஸின் தீர்க்க தரிசனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வலுவிழந்து தான் போயின.

அதாவது, மார்க்ஸீயத்தின் சிஷ்ய கோடிகளே தங்கள் நடைமுறையால் அதனை தலைகீழாக்கிவிட்டார்கள்!

**ஏங்கல்ஸ்** ஒரு முறை குறைபட்டுக்கொண்டார். “என்ன இந்த மார்க்ஸ், இப்படிச் செய்கிறாரே! ஹெகலின் தத்துவங்களைத் தலைகீழாக நிறுத்திப் பார்க்கிறாரே!” என்று.

உலக நடைமுறைகளை வைத்து, கணித்துப் பார்த்தால் மார்க்ஸின் தத்துவங்கள் இன்று தலைகீழாகத்தான் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன.

ஒரு கோட்பாட்டை வரைமுறை செய்து தந்த அளவில் மார்க்சின் பொறுப்பு - மார்க்சீயத்தின் பணி பூரணமாகிறது. லெனின்தான் அதனை பிரயோக நிலைக்குக் கொண்டுவந்தார். அதாவது சோவியத்தில் அதனை நடைமுறைக்குக் கொண்டுவர சில திருத்தங்கள், சேர்க்கைகள் தேவைப்பட்டன.

இன்னும் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்றால், மார்க்சீயம் பிரயோகமான போது அது லெனினிஸமாகிவிட்டது!

லெனினிஸத்தில் ஸ்டாலின் தன் சொந்த விருப்பு வெறுப்புகளைத் திணித்தபோது அது ஸ்டாலினிஸமாகிவிட்டது!

இருபதாம் காங்கிரஸின் பிறகுள்ள நிலைப்படி சொல்ல வேண்டுமானால் அதிகாரவெறிக்காக ஸ்டாலின் லெனினிஸத்தை களங்கப்படுத்தினார் என்றே குறிப்பிட வேண்டும். இந்த ஸ்டாலினிஸத்தை மா-சே-துங் அலங்கார அறைக்கு இட்டுச் சென்று ஜிகினா வேலை செய்து முடித்தபோது தான் உலகம் கம்யூனிஸமெனும் பயங்கரத்தை பூரணமாகத் தரிசித்தது!

கம்யூனிஸ்டுகளின் அற்புதமான திறமை என்னவென்றால், தங்கள்போக்கிலேயே அவர்கள் எதிரிகளைச் சிந்திக்க வைத்து விடுகிறார்கள்! இருந்தாற்போல சில தலைப்புகள் அவர்களிடம் அதிகமாக அடிபடும்... **‘சரித்திரத்தின் தவறுகள்’**, **‘கலையும் மார்க்சீயமும்’**, **‘அரசியல் புனருத்தாரணம்’** இப்படிப் பல!

நூற்றாண்டுகளாக வளர்ந்த மனித குலத்தின் நாகரீகத்தையும், கலையையும், வாழ்க்கை முறையையும் சித்தரிப்பது சரித்திரம்.

(8-ம் பக்கம் பார்க்க)




மலர் 1 | 24-2-63 | இதழ் 18

# புயல் வருகிறது - எச்சரிக்கை!

பலிகேட்கும் தேவதைகளின் நாக்கு ருசியைச் சட்டம் கொண்டு வந்து தடுத்தாகி விட்டது. இனி முதிர்ந்த செம்மறி யாடுகளின் சிவப்பு இரத்தம் தேவதைகளின் பெயரால் தரையில் கொட்டமாட்டா.

ஆனல் இந்தி வெறிபிடித்த காட்டுத் தேவதைகளுக்கு தமிழகத்து வாலிபர்களின் இள ரத்தங்கள் அடிக்கடி தேவைப் படுகிறது.

1935-ம் ஆண்டிலிருந்து அடங்காப் பசி கொண்ட இந்தித் தேவதைக்கு தமிழகம் தந்திருக்கும் பலி விரல் விட்டுச் சொல்லக் கூடியதல்ல; பட்டியல் போட்டுக் காட்ட வேண்டியதாகும்.

இந்தி ஒவ்வொரு முறையும் விஸ்வரூப மெடுக்கும் பொழுது தி. மு. கழகம் மக்கள் சக்தியெனும் வலிமையால் அடித்து வீழ்த்தியிருக்கிறது. அந்த உணர்வு கொண்ட எழுச்சியை அடக்கும் அதிகார வெறித்தனத்திற்குச் சில வாலிப மலர்கள் பலியாகி உதிர்ந்திருக்கின்றன. தாய் மொழி காக்க உயிர் கொடுத்த தங்கங்களின் திருப்பெயர்கள் வரலாற்று ஏடுகளில் நிலையான இடம் பெற்றுவிட்டன,

**“1965-க்குப் பின்னரும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும்”**-இப்படி வாக்குறுதி கொடுத்தார் மறைந்த முதியவர் **பண்டிதபந்த்.**

**“ஆங்கிலம் ஒரு இணை மொழியாக நீடித்து இருக்கும். இந்தி மொழி புழக்கத்தில் இல்லாத பிராந்தியங்களின் மக்கள் விரும்பும் வரை ஆங்கில மொழியை அகற்றமாட்டேன்”** —இவ்வாறு அபயம் கொடுத்தார் **பண்டித நேரு.**

ஆனல் நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட இருக்கும்—1965-க்குப் பிறகும் ஆங்கில நீடிப்புத் திருத்த மசோதாவை எதிர்த்துக் கூச்சல் கிளம்பியிருக்கிறது இந்தி வெறியர்களின் முகாமிலிருந்து.

பண்டித நேருவின் வாக்குறுதிக்குப் பாதகம் ஏற்படும் வகையில் எழுந்த இக் கூக்குரலைக் கேட்டதும் அறிஞர் அண்ணு அவர்கள் மிகத் துரிதமாக ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அது அறிக்கையாக மட்டுமல்லாமல் தில்லி அரசினர்க்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமைந்திருந்தது.

பண்டித நேரு பாராளுமன்றத்தில் பேசுகின்ற பொழுது **“1965-க்குப் பின்னரும் ஆங்கிலம் துணை மொழியாக நீடிக்கும் திருத்த மசோதா இக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும்”** என்ருர்.

ஒரு சிலரின் கூச்சலுக்குப் பயந்து புண்டிதபந்த் அவர்களின் வாக்குறுதி களங்கப்படுத்தப்பட மாட்டாது என்று உறுதிமொழி தந்திருக்கிருர்.

பண்டித நேரு அவர்களின் இந்த உறுதிமொழி இந்தி வெறியர்களின் கண்களில் கொள்ளியை எடுத்து வைத்தாற் போல் உறுத்தியிருக்கிறது.

குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தும் போது அதை எதிர்த்து சோசலிஸ்டு கட்சியைச் சார்ந்த நான்கு உறுப்பினர்கள்—இந்தி வெறியர்கள் வெளி நடப்புச் செய்திருக்கின்றனர்.

இது பாராளுமன்றத்தை மட்டுமல்ல மரியாதைக்குரிய குடியரசுத் தலைவரையும் அவமானப்படுத்திய நிகழ்ச்சியாகும்,

“நான் ஆங்கிலத்தில் பேசி முடித்தபின் இதே உரை துணை ஜனதிபதி ஜாகிர் உசேன் மூலம் இந்தியில் தரப்படும்” என்று குடியரசுத் தலைவர் சொல்லியும்—“ஜனநாயக அமைப்பில் இது போன்ற வெளிநடப்புக் கூடாது” என்று வேண்டுகோள் விடுத்தும் கேளாமல் திமிரோடு வெளியேறியிருக்கின்றனர் சோசலிஸ்ட் உறுப்பினர்கள்.

அவசர நிலைமை அமுலிலிருக்கும் பொழுது இது போன்ற எதிர்ப்பும் வெளிநடப்பும்—குடியரசுத் தலைவர் அவமதிப்பும் பொறுப்பற்ற வெறித்தனமான செயலாகும்.

வெளிநடப்புச் செய்த நான்கு சோசலிஸ்டு உறுப்பினர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுக்க ஒரு குழு அமைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது போன்ற சிறுபிள்ளைத்தனமான செயல் இனி நடைபெருத வகையில் அந்தக் குழு எடுக்கும் நடவடிக்கை அமைய வேண்டும்.

மூர்க்கத்தனமான இந்தி வெறியாட்டம் பாராளுமன்றத்தில் மட்டுமல்ல பல மாநிலங்களில் பரவலாகத் தலை யெடுத்து வருகிறது.

பீகார் மாநிலத்தின் கவர்னர்- தென்னுட்டைச் சார்ந்த அனந்தசயனம் அவர்கள் சட்டசபையில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தும் பொழுது உக்கிரசிங் என்ற ஜனசங்க உறுப்பினர் இந்தியில் பேசும்படி காட்டுத்தனமாகக் கூச்சலிட்டிருக்கிருர்.

மத்தியப்பிரதேச சட்டமன்றத்திலும் இது போன்ற வெறுக்கத்தக்க சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதிக்ந்காரர்களின் இந்த வெறி தென் மாநிலத் தலைவர்களை உஷார்படுத்துவதாகும்.

அமைதியாகப் படுத்திருக்கும் அரிமாவின் வாலில் நெருப்பு வைக்கின்ற வேலையாகும்.

மொழிப்பற்றை மொழி வெறிக்கு இழுத்துச் செல்லும் மோசமான நடவடிக்கையாகும்.

இந்த நிலைமையை மேலும் நீடிக்கவிடாமல் பொறுப்புள்ள தலைவர்கள் இந்தி வெறியர்களைக் கண்டித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மெல்ல மெல்ல வளருமானல்......

இந்தி வெறித்தனத்தைக் கூண்டோடு ஒழிக்க தென் மாநிலங்களில் பெரும் புயல் உருவாகும் என்று எச்சரிக்கை செய்கிருேம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

*உனக்கு இப்பொழுது திடீர் ‘புருஷ லக்ஷணம்’ வந்திருப்பதாகச் சிலர் சொல்லுகிருர்கள்.*

*நாடு அதைப் பார்க்கவேண்டும்.*

*நானும் அதை ரசிக்க வேண்டும்!*

த. தே. க. கொள்கை - விரும்பினல் பிரிந்து போகும் உரிமை கொண்ட **தன்னுட்சித் தமிழகம்.**

*வர இருக்கும் பிரிவினைத் தடைச்சட்டம் த. தே. க.வை மட்டும் விட்டுவைக்காது. இதற்கு என்ன செய்யப்போகிருய். இதுவரை வாய் திறக்கவில்லையே?*

*உனக்கு கேள்வி கேட்டு மட்டுமே பழக்கம்!*

*இப்பொழுதாவது பதில் சொல்!*

*போர்! போர்! போர்!*

*பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்து களத்திலே போர்! வேலெடுத்துத் தடைச் சட்டத்தின் விலாவொடிக்கப் புறப்படுகிருயா?* இல்லை. டிக்கெட் எடுத்துக்கொண்டு விமானத்தில் பெங்களூருக்குப் புறப்படுகிருயா?

*சட்டத்திற்குப் பயப்படுவது கோழைத்தனம்!*

உனக்குத் தெரியாததல்ல- **பிறகு வீரத்தின் விலைவாசி** கேட்டு மானத்தை வாங்குவார்கள்.

*நீ, மாகவிஞன் மட்டுமல்ல- மாவீரன்! தியாகப் பரம்பரை! செக்கிழுத்த சிதம்பரனரின் வழிவழியில் இருக்கவேண்டிய நீ தலையெழுத்து த. தே. க. வில் இருக்கிருய். அதைப்பிறகு மாற்றிக் கொள்ளலாம். முதலில் போர் முனை நோக்கிப் புறப்படு!*

**“புறப்படு மகனே புறப்படடா”** ஆகா வீரத்தின் இசை அதோ காதில் ஒலிக்கிறது. விழி! எழு! ஓடு! சோரத்தில் பிறந்த த. தே க. கொள்கையைக் காப்பாற்று.

*என்னைப் பார்த்துக்கேள்விக் கணை-கிண்டல் பாணம்தொடுக்கிருயல்லவா? உன்னைப்பார்த்து நான் கேட்கும்* **ஒரே ஒரு கேள்வி** இது.

*பதிலென்ன?*

*நீ, வீரனு? கோழையா?*

*14 காரட்டா? தூய தங்கமா?*

**உன்னைத்தான் கேட்கிறேன்; யார் நீ?**

# சித்தம் கலங்கிய சிவஞான கிராமணியாரே!

## பித்தம் தலைக்கேறிப் பிதற்றுதீர்!

புகைப்படத்தில் தம் தலை விழவேண்டும் என்பதற்காக முண்டியடித்துக்கொண்டு முன்னே வந்து நின்றவர்களெல்லாம் "நாங்கள்தான் விழாவையே ஏற்பாடு செய்தவர்கள்!" என்று தகரமுரசு தட்டிக் கிளம்பிவிட்டார்கள்.

வேறு எதுவும் இப்படி நம் சினத்தைத் தூண்டிவிடவில்லை! சவஞானம் என்ற ஓர் அவமானம்தான் நம்மை இப்படி வம்பிற்கிழுத்திருக்கிறது.

கனித் தமிழின் தனிச் சுவையை எல்லோருக்கும் ஊட்டி, தாய்மொழிக்கும் பேய்மொழிக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டி, எண்ணறு பணிகளாற்றிய கழகத்தைப் பார்த்துத்தான், அந்த அவமானம் கேட்கிறது!

இருளெல்லாம் அகற்றி, வழியெலாம் துலக்கிப் புத்தொளி பரப்பிய முழுமதியைத்தான் 'செங்கோல்' பழிக்கிறது.

நாமெல்லாம் களம் கண்டு நம் இல்லமெல்லாம் கண்ணீர்க் குளமாகிக் கிடந்த வேளையில், நடிகர்கள் வீட்டு வாயிலைக் காத்துக்கிடந்த பிறவிகள்தான் எள்ளி நகையாடுகின்றன!

**தமிழுக்காக, தமிழ்நாட்டுக்காக தி. மு. கழகம் என்ன செய்தது? விரல்விட்டு எண்ணிக்காட்ட முடியுமா?"**

தமிழ்! தமிழ்நாடு!
நம்மொழி! தாயகம்!

இந்த உணர்ச்சிகளை எல்லாம் கருவில் வளர்த்தும், பெற்றெடுத்ததும், கைநிறையத் தூக்கிச் சீராட்டிப் பாலூட்டியதும், வளர்த்து ஆளாக்கி அன்னியன் பாழாக்கி வைத்திருந்த நிலத்தைக் காத்திடப் புறப்படு என்று வாள் தந்ததும் யார்? யார்? தமிழகத்தில் இப்பணியைச் செய்தவர்கள் நாம்! நாம்! நாமேதான்! வரலாறு உரைக்கும் இவ்வுண்மையை! நாடு அறியும்!

விரலையா மடக்கச் சொல்கிறீர்கள்? உங்கள் முதுகையே உடைக்கும் வன்மை மிகு சான்றுகள் எண்ணற்றன உண்டு எங்களிடம்!

"மொழிப்பற்றெங்கே! விழிப்புற்றெழுக!" என்றுரைத்தது எங்கள் படை! தமிழுக்கே ஒரு புதிய நடை தந்தது எங்கள் தொண்டு! இருள் மண்டிக் கிடந்த சுவடிகளுக்கெல்லாம் பொருள் விளக்கி புகழ் சேர்த்த பெருமையும் எங்களுக்கு! புதிய பல துறைகளையெல்லாம் தொட்டுத் தமிழன்னைக்கே மாலைகள் சூட்டியதும் எங்கள் கையே!

"தமிழில் வீரத்தோடு எழுத முடியும் என்பதைச் செய்து காட்டியவர்கள் தென்காசி சொக்கலிங்கமும் காஞ்சி அண்ணாவும்தாம்!" என்று அவாள் வட்டாரமும் புகழும்படி அரும்பணியாற்றியவர்கள் யாமேயன்றோ?

கண்ணெதிரே வாழ்பவர்கள் ஆக்கிவைத்ததையே படியெடுத்துவிட்டு, "புதிய இலக்கியம் படைத்துவிட்டேன்" என்று தம்பட்டம் கொட்டிய அவமானங்களே! எதிர்முகாம் தலை எழுத்தாளர் கல்கியும், எவரைப் பார்த்துவிட்டுத் தமிழ் நாடகத்திற்கு நல்வாழ்வு கிட்டிவிட்டதாய் உறுதி கொண்டார்?

நற்றமிழில் பேசினாலே அவனை எந்தக் கட்சிக்காரனென்று இருள்மதியர் தூற்றினர்? "திராவிடத்தான்" என்று உம்மைப் போன்ற குறைமதியரும் தூற்றினர்? தமிழை வளர்ப்பதே குற்றம் என்றேசிய நீங்கள்தானா எங்களைப் பார்த்துக் கேட்கிறீர்கள்- தமிழுக்காக என்ன செய்தோம் என்று!

தமிழை வளர்த்தது யார்?

நாங்கள் சொல்லவேண்டாம்; நாடு சொல்லும்- கேட்டுப்பார், எங்கள் பணியை!

முழுப்பூசனியைச் சோற்றில் மறைக்கும் புரட்டை அரசியலில் நடத்தும் தீவட்டிகளே! கதிரவனை மறைக்கக் கைக்குடை ஏந்தி வரும் அறிவிலிகளே! கல்லில்பட்ட மண் பாண்டமாக கண்ணெதிரே உங்கள் வாதம் சுக்கு நூறுவதைக் காணீர்!

சென்னையைக் காத்தது, தமிழ்நாட்டுப் பெயர்க்கிளர்ச்சி வடஎல்லைப் போர், தென் எல்லைப் போர் முதலியவற்றைச் சுட்டிக் காட்டி "இவைகளில் ஏதாவது ஒன்றிலாவது தி. மு. கழகம் பொறுப்பேற்றதுண்டா?" என்று கெக்கலி கொட்டுகிறது, சொந்தச் செல்வாக்கிற்கு வக்கில்லா அந்த ஓசிப் புகழ்!

**பஞ்சாபில் ஓர் ஆயுள் கைதி!**

ஃ தமிழக அரசு ஓர் ஆயுள் கைதியை வீராதி வீரனுக்கியது!

ஃ அதற்கு நான் என்ன மட்டமா என்று பஞ்சாப் அரசும் கிளம்பியிருக்கிறது!

ஆம்! ஆம்!

கொலை–கொள்ளை செய்தவனுக்குப் பூமாலை!

கொடுமைகள் எத்தனை உண்டோ அத்தனையும் செய்தவனுக்குப் பாவமன்னிப்பு!

**சுவையான கட்டுரை அடுத்த இதழில்!**

என்ன செய்தோம் என்று கேட்கிறாய்?

எண்ணச் செய்தோமே, 'நம்மொழி தமிழ்' என்று! அது போதாதா? அந்தத் தமிழ் விந்தைத் தமிழ்; வீரத்தமிழ்! நம் சொந்தத் தமிழ் என்றெல்லாம் ஊரெங்கும் உணர்வூட்டினோமே? அது போதாதா? தமிழைக் காப்பதற்காகக் களம் கண்டோமே? அது போதாதா? இடை வழியிலேயே பிய்த்துக் கொண்டோடிய உங்களை எல்லாம் மன்னித்துவிட்டு இந்தியை எதிர்த்தோமே? எண்ணற்றோர் சிறை புகுந்தோமே! இரண்டு பேரைப் பறி கொடுத்தோமே! அது போதாதா? எண்ணறு மாநாடுகள் மொழிக்கென்று கூட்டி எலியென ஒதுக்கப்பட்டுக் கிடந்த தமிழறிஞரையெல்லாம் புலியாக்கினோமே! அது போதாதா?

வட்டம், மாவட்டம், மாநிலம், சொற்பொழிவு, தாயகம், தலைமை நிலையம், பட்டி மன்றம் போன்ற சொற்களைக்கூட எங்களைப் பார்த்துப் பயின்று கொண்ட நீரா எம்மைப் பார்த்து வக்கணைபேசுவது?

வடஎல்லைக் கிளர்ச்சியில் தி.மு.க. முன்னோடிகளுள் ஒருவரான ஏ. எல். சி. கிருட்டிணசாமி முதலியார் அண்ணாவின் ஆணைக்கிணங்கக் களம் புகுந்ததை நீர் மறைத்தாலும் நாடு மறக்காது! ஐயமிருப்பின் உமது பழைய ஏட்டின் இதழ்களைப் புரட்டிப் பார்த்தாலேபோதும்!

கழகத்தவர் அடிபட்டது, உதைபட்டதுதானே விளங்கும் அப்போதுதானே வாய்ச்சொல் வீரர்களாய் இல்லாது உண்மையிலேயே உழைத்தோர் யார் என்பது புரியும். அதன் விளைவாகக் கழகத் தோழர்கள் அரசினர் அடக்கு முறைக்கும் காவல்துறை தொடுத்த வழக்குகளுக்கும் பலியானதும் நாடறிந்த சேதிகள்!

'தமிழ் நாடு' என்ற பெயர்ப் போரில் எங்கள் பங்கு பெரியது என்பது எழுதித்தான் தெரிய வேண்டியதில்லை. காலம் அதைக் கல்லெழுத்தால் மக்கள் மனதில் பதித்திருக்கிறது; சட்டமன்ற ஏடுகளும் சான்றுக்கிருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் ஒரு மொத்தக் கிளர்ச்சியாய் 'பிப்ரவரி 20-ம்' நாளைய பொதுவேலை நிறுத்தத்தை வெற்றியாக்கியதில் எந்த இயக்கம் முன்னின்றது-இதை செத்துப்போன ஜீவாவிடம் கேட்டுப் பார்த்தாலும், இருக்கின்ற பொ. தி. இராசனிடம் வினவிப் பார்த்தாலும் சரி; உண்மை விளங்கும்!

தென் எல்லைக் கிளர்ச்சியில், அறிஞர் அண்ணா அவர்களே தோழர்கள் மதியழகன், மதுரை முத்து ஆகியோரோடு நேரடியாக நாஞ்சில் சென்று கழகத் தோழர்களின் பொறுப்பை உணர்த்திக் கடமையாற்றச் சொன்னது பழஞ்சேதியாக இருக்கலாம்; ஆனால் களம் கண்டோர் நெஞ்சில் பதிந்த சேதி. நாஞ்சில் சென்று திரும்பிய அண்ணா மதுரை ஊழியர்களிடம் பேசுகையில் கழகத் தோழர்களுக்கு விடுத்த செய்தி காட்டுத்தீயாகப் பரவிப் புரட்சி எரிமலையை வெடிக்கச் செய்ததும் சிந்தை நிறைந்த சேதி. அதையடுத்து சின்னாட்களில் மதுரை வழியே திண்டுக்கல் நிகழ்ச்சி ஒன்றுக்கு வருகைதந்த நடராசபிள்ளையை தமிழர்களை சுட்டுக் கொன்ற மலைஞால் அமைச்சரவை உறுப்பினரை - எதிர்க்க கறுப்புக் கொடி காட்டி மூன்றே மணி நேரத்தில் பல்லாயிரம் கழகத் தோழர்கள் மதுரை புகை வண்டி நிலையத்தில் திரண்டதும், தீ மூண்ட சேதி அறிந்துவிட்ட நடராசபிள்ளை முன்னரே புகை வண்டியை விட்டு விட்டு கார்மூலம் மறைந்தோடியதும் உமக்குத் தெரியாது, ஊருக்குத் தெரியுமே!

'48ம் ஆம் ஆண்டில் திராவிட கழகத்தோடு இந்தியை எதிர்க்க வருகிறேன் என்று சொல்லிவிட்டு நடுவழியில் ஓடிய பிண்டங்களா திராவிட இயக்க பாரம்பரியத்தை எள்ளி நகையாடுவது?

எதையும் சொல்லும் முன்னர் இனிமேலாகிலும், எச்சரிக்கையாகச் சொல்லுங்கள்.

மொழிப் பிரச்னை இல்லாவிட்டால் இவர்களால் ஒன்றும் நடவாது என்று சொல்லி வைத்தவர்களே!

தமிழகத்திற்கு வடக்கு கொஞ்ச நஞ்ச நன்மைகளாகிலும் செய்கிறதென்றால் அதற்கு தி. மு. கழகமே காரணமென்று அரசியல் அறிந்தோர் சொல்வதை அறிக; உணர்க!

பெயரெலாம் தமிழாகி, தெருவெலாம் தமிழ் முழங்கி, தமிழகம் உள்ளிட்ட தென்னகத்தை காத்து நிற்கும் கழகத்தின் மீது நீரில்லை, உம் மூதாதையரில்லை— எவர் வந்தாலும் பழி தூற்றிட முடியாது. சாய்த்திட முடியாது. புகைப் படத்திற்குத் தலை நீட்டுவோர் இதை உணர்க!

**மா. பாண்டியன்**

# கொங்குநாட்டுக் கோயபல்ஸ்

அவன் புளுகு வியாபாரத்தில் மன்னன். சாம்ராஜ்ய மன்னர்களிலிருந்து, சதங்கை ஒலி மாதர் குழாம்வரையிலும் அவன் விட்ட சரடு மெய்யின் உருவாக நின்று நிலேத்து ராஜ வாழ்வு வாழ்ந்திருக்கிறது.

அவனது ஒரு சொல்லுக்குப் பல அவதாரங்கள் உண்டு. இடத்திற்குத்தக்கபடி நேரத்திற்கு உருவம் மாறும். தன்மை வேறுபடும்.

அவனது மண்டை மயானத்திற்குப் போகும்வரை கொலு மண்டபத்தில், பொது இடங்களில், வியாபார ஸ்தலங்களில், விலேமாதர் வீடுகளில் உண்மை ஒரு நாழிகைகூட நிம்மதியாக வாழ்ந்ததில்லே.

'கப்சா' விடுவதில் அவன் கைதேர்ந்த மன்னன். அவனுக்குப் பெயர்தான் **கோயபல்ஸ்.**

அவன் செத்துவிட்டான் என்று எல்லோரும் சொன்னுர்கள். இல்லே! அது பொய்!

அவன் தமிழ்நாட்டில் வந்து மறு பிறவி எடுத்திருக்கிருன். இங்கே அவனுக்குப் பெயர் **சம்பத்குமார திருவேங்கட கிருஷ்ண ராமானுஜ தாசானு தாசன்.**

இவ்வளவு நீளத்தில் ஒரு பெயரா? இது ஒரு காட்டு... என்று ஆராய்ச்சியில் இறங்கி விடாதீர்கள். இது அவனுக்கு அவன் குடும்பத்தார் இட்ட செல்லப்பெயர்! வழி வழியாக வரும் திருநாமமும் கூட அது!

அரசியலில் இவர் திசைமாறி விழுந்த நாள் முதற்கொண்டு கோயபல்ஸிற்குக் குருநாதராகி விட்டார்.

இந்த சம்பத்குமார ராமானுஜ தாசான தாசர் விடும் சரடும், கோயபல்ஸ் கொட்டிய புளுகும் ஒரே அடித்தளத்தில் உயிர் பெற்றவை. 'பொய்யின் பொலிவிலே கோயபல்ஸ் மது கண்டான், மங்கை சுகம் கண்டான், மயக்கத்தில் மகிழ்ச்சி கண்டான்.

ஆனல் நமது கொங்கு நாட்டுக் கோயபல்ஸ் விடும் அரசியல் வாண வேடிக்கை மூலம் அவன் கண்டதையெல்லாம் இவர் சுவைத்தாரா என்பது அம்பலத்திற்கு வராமல் நின்று விட்ட விவகாரம். இவர் தனிக் கட்சி கண்டார். தனித்தலேமை பெற்றுர். மேடை, கைதட்டல், போலிப் புகழாரம் இத்தனேயும் பெற்றுப் பவனி வருகிருர்.

மேடையில் இல்லாத ஒன்றிர்க்கு உருவம் கொடுத்து அதை நாட்டில் மேயவிட்டு விடுவதின் மூலம் தி. மு. கழகத்தை அடித்து வீழ்த்தி விட்டதாக அவர் மூடாத விழிக்குள் கனவு கண்டு வருகிருர்.

வான வில்லின் வர்ண ஜாலத்திற்கு எத்தனே நாழிகை வாழ்வுண்டோ அதே கதிதான் வாய் ஜாலத்திற்கும்.

தி. மு. கழகத்தின் திராவிட நாடு பிரச்சினேயையும் அந்த ஜாலத்திற்குள் அடக்கிவிட ஜல்லடங் கட்டுகிருர்.

"எனக்குத் தெரியும் இவர்களில் எத்தனே பேருக்குத் திராவிட நாடுமீது நம்பிக்கை இருக்கிறது என்று. ராமன் வீட்டிலே நாங்கள் கூடிப் பேசியிருக்கிருேம் திராவிட நாடு நடக்காது என்று. எல்லோரும் அதை அப்பொழுது ஒப்புக் கொண்டார்கள். இன்று சட்டம் வரப்போகிறது என்று தெரிந்ததும் அந்தத் திராவிட நாடு அடங்கி ஒடுங்கிவிட்டது. தலேவரே அதைக் கைகழுவி விட்டார்".




மேற்கண்ட வாசகங்கள் சம்பத்குமாரன் தமிழ் நாட்டு மேடைகளில் கொட்டிவரும் புளுகு மணிகள். பூதக் கண்ணுடி வைத்துத் தேடினுலும் இதில் கடுகத்தனே உண்மை கூடக் காண முடியாது. இது அத்தனேயும் மக்களேக் குழப்பத்தில் ஆழ்த்தத் தூக்கிப் போடும் கற்பனே வெடிகுண்டு.

பிடாரன்

தி. மு. கழகத் தலேவர்கள் தடைச் சட்டத்தைக் கண்டு அஞ்சி அடங்கிவிட்டார்கள் என்பது பச்சைப் புரட்டு வாதம்.

வர இருக்கும் பிரிவினேத் தடைச்சட்டம் தி. மு. கழகத்தின் திராவிட நாடு பிரச்னேக்கு மட்டுமல்ல.

தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய நான்கு மாநிலங்களும் மொழிவழி பிரிந்து இனவழி ஒன்று கூடி அமைக்கவிருக்கும் – சோஷலிச சமதர்ம திராவிடக் கூட்டாட்சியான திராவிட நாடு பிரிவினேக்கு மட்டுமல்ல இப்பொழுது வரப் போவதாகமிரட்டிக்கொண்டிருக்கிற சட்டம்.

இந்திய யூனியனிலிருந்து எந்தப் பகுதி எந்த முறையில்பிரிந்து போக விரும்பினுலும் அதாவது **வெட்டிக்கொள்ளும் உரிமையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தன்ளுட்சித் தமிழகம்** உட்பட – வெட்டிக் கொள்ளுதல், பிரிவினே, தன்ளுட்சி இந்த வார்த்தைக்கே உலே வைப்பதாக அமைய இருப்பதுதான் வர இருக்கும் சட்டம்.

அகில பாரத ஏக இந்தியத் தலேமையை எந்தவிதச் சிறு மாற்றங்கூட இல்லாமல் ஒப்புக் கொள்ளும் மனிதர்களேத்தான் வர இருக்கும் சட்டம் தீண்டாமல் விலகி ஓடப் போகிறது.

வெட்டிக்கொள்ளும் உரிமை கொண்ட தன்ளுட்சியாகஇருந்தாலும்-திராவிடக் கூட்டாட்சியாக இருந்தாலும் வரப் போகும் சட்டம் அவர்கள் மென்னியைப் பிடிக்கத்தான் செய்யும்.

சட்டம் இவ்வளவு தெளிவாக அலறிக்கொண்டு வரும் பொழுது அது தி. மு. கழகத்தை மட்டும்தான் கவ்விக் கொண்டு போக வருகிறது. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் இரையாகப் போகிறீர்களா? இலட்சியத்தைவிட்டு ஓடிவிடப் போகிறீர்களாஎன்று வாய் கூசாமல் கேட்பது அரசியல் மோசடித்தனம் மட்டுமல்ல- முதுகெலும்பில்லாதவனின் கோழைத்தனமான கூக்குரலுக்கு ஒப்பாகும்.

**நீ என்ன செய்யப் போகிருய்? அதைச் சொல்!**

உன்னே மட்டும் அந்தச் சட்டம் எப்படிக் கொத்தாமல் விட்டு வைக்கும். உன்னே அது பிடுங்காமல் ஒதுங்கிப் போகும் என்ருல் உன் அடிப்படை லட்சியமான தன்ளுட்சித் தமிழகக் கொள்கையை பாடைகட்டி வேக வைத்துவிட்டாய் என்று தானே பொருள்.

சொல்! ஊருராய்ப் புளுகிக் கொண்டு வரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பரம பிதாவே சொல்! கத்தமட்டுமே கற்றுக் கொண்டிருக்கும் செம்மறியாடுகளின் வழி காட்டியே சொல்!

உன் உயிரையும் சேர்த்துப் பறிக்க மரணக் கயிருக வரும் சட்டத்தை எதிர்த்துப் போர்க் கொடி தூக்கப் போகிருயா? இல்லே சரணுகதியடையப் போகிருயா?

இதற்குப் பதில் சொல்லிவிட்டு கழகத்தின் பக்கம் திரும்பி கேள்விக்கணேயை எழுப்பு.

நாங்கள் யார் என்பது கிடக்கட்டும்! முதலில் நீ யார் என்பதைக் காட்டு. அப்பொழுது உன் முடிவு கோழைத்தனமாக இருக்குமென்ருல் உன் முகத்தில் காரி உமிழ நாடு காத்துக் கிடக்கிறது.

கொங்குநாட்டுக் கோயபல்சே என்ன செய்யப் போகிருய் சொல்?



# வைராக்கியம்

**எஸ். எஸ். தென்னரசு**

திலகவதியம்மையார் படித்து முடித்ததும் செவந்தியைப் பார்த்தார். செவந்தி மயக்கம் போட்டுக்கிடந்தாள்; அவளது குழந்தை வெராந்தாவில் தவழ்ந்து கொண்டிருந்தது. திலகவதி அம்மாள் சிறைக்குத் தகவல் அனுப்பினர். செவந்தி, சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மறுநாள் குணம் பெற்ருள்.

பதினைந்து நாட்கள் கழித்து. சித்திரவேலுக்குப்பதில் கடிதம் எழுதினுள் செவந்தி. திலகவதி அம்மையாரே தன் கைப்பட கடிதம் எழுதிக்கொடுத்தாள்.

“உயர் திரு. மாமா அவர்களுக்கு, மருமகளின் அநேகக் கோடி வணக்கம். தங்களது கடிதம் கிடைத்தது. அதில் மிகவும் அதிசயமான தகவல் எழுதப்பட்டிருந்தது. நானும், வீரணனும் சேர்ந்து கொன்றதாகச் சொல்லப்பட்ட சிங்கராயர் இரங்கூனில் இருப்பது உண்மைதான என்று இன்னும் நான் நம்பவில்லை. ஒரு வேளை, எங்கள் மீது தொடரப்பட்ட வழக்கு, கண்கட்டு வித்தையாகவும் இருக்கலாம். சிங்கராயன், தமிழ்நாட்டுக்கு வந்து சொல்லவேண்டிய இடத்தில் ‘நான் சாகவில்லை‘ என்று சொன்னுல் எங்களுக்குப் புது வாழ்வு கிடைக்கலாம். முயற்சி செய்யுங்கள்.

பிரியமுள்ள மருமகள்,
செவந்திமாலை.

❋

## அன்னையும் அதிகாரமும்

மூன்று மாதங்களுக்குப் பின் ஒரு நாள்!

அன்று மாலைப்பொழுது சாய்ந்துவிட்டது. கைதிகள் கூண்டுக்குள் போகும் சமயம். மழை தூறிக்கொண்டிருந்தது. சிறை அதிகாரி ஜெகதீசன் கைப் பிரம்பைச் சுழற்றிக் கொண்டு வேகமாக அவரது அறைக்குள் நுழைந்தார். அவரது முகம் கடுகடுப்பாக இருந்தது. அப்பொழுதுதான் சிறைக்குள் யாரோ ஒரு கைதியைப் பதம் பார்த்துவிட்டு வந்திருக்கிருர். சிறை மதில்கள் கோயில் மதில்களைப் போல் உயர்ந்தவை; வெளியில் இருக்கும் மாடிவீடுகள் கூடக் கண்ணுக்குத் தெரியாது. அவ்வளவு உயரம்! குருவிப் பொந்துகளைக் கூட அந்தச் சுவர்களில் பார்க்க முடியாது. எங்காவது செதில் போயிருந்தாலும் உடனே பூசி விடுவார்கள் அதிகாரிகள்.

ஒரு கைதி - குல்லாயில் சிவப்புப் புள்ளி வைத்த ஆயுள் கைதி-மதில் ஓரமாக பயந்து பயந்து நடந்துவந்தான். அவன் அதிகாரியின் அறையை நோக்கித்தான் வந்தான். அவன் முகத்திலே பீதி இருந்தது. பார்ப்பவர்களுக்கு அந்தக் கைதி தப்பித்து ஓட எத்தனிப்பவன் போலத்தான் தெரிந்தது.

அதிகாரி மிகவும் நுணுக்கமான புத்தியுள்ளவர். எத்தனையோ ஆயிரக்கணக்கான மனோநிலையுடைவர்களுடன் பழகுபவரல்லவா! அவர் அறையிலிருந்தபடி ஜன்னல் வழியாக அந்தக் கைதியைக் கவனித்துக் கொண்டே இருந்தார். அந்தக் கைதி, ஒரு பூச் செடிக்குப் பக்கத்தில் போய் பூக்களைப் பறித்தான். பறித்த பூக்களை தன் குல்லாவுக்குள் வைத்துக் கொண்டு மீண்டும் நடந்தான். நடையின் வேகம் வரவர அதிகரித்தது. அதற்குள் அதிகாரியின் அறை வந்துவிட்டது. ஒருவருக்கும் தெரியாமல் அதிகாரியின் அறைக்குள் நுழைந்துவிட வேண்டுமென்ற ஆசையில் குபீரென்று அறைக்குள் பாய்ந்தான். அவன் வேறுயாருமல்ல வீரணன்தான்.

உள்ளே ஜெகதீசன் கைத்துப்பாக்கியை நீட்டியபடி வாசற்படியில் நின்ருர்.

“எசமான் என்னை மன்னிக்க வேண்டும். நான் ஒரு ஆயுள் கைதி. செவந்திமாலையின் கணவன். நான் தங்களிடம் பிச்சை கேட்க வந்திருக்கிறேன். உயிர் பிச்சை கேட்கவந்திருக்கிறேன். நான் யாரைக் கொன்றதாகத் தண்டிக்கப்பட்டேனே அவன் இரங்கூனுக்குப் போய்விட்டு வந்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. செவந்தி கொட்டடியிலிருந்து சொல்லியனுப்பியிருக்கிருள். அவன் நாளை இரவு சிறைமதில் ஓரமுள்ள தங்களது வீட்டுத் தோட்டத்திற்கு வருவதாகச் சொல்லியனுப்பியிருக்கிருன். நான் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவன். மானத்திற்காகக் குற்றங்களைச் செய்தவன். கொலை எனது தொழிலல்ல. கடவுளை வேண்டுவது போல் வேண்டுகிறேன். அவனேடு பேசுவதற்கு மட்டும் எனக்கு அனுமதியுங்கள். என் மனைவியின்பேரில், எனது குழந்தையின் பேரில் ஆணையிட்டுக் கெஞ்சுகிறேன். நான் ஓடமாட்டேன்” என்று அழுது புலம்பி தொப்பிக்குள்ளிருந்தமலர்களை அதிகாரி ஜெகதீசனின் பாதங்களில் கொட்டி வணங்கி கண்ணீரால் கழுவினன் வீரணன்.

ஜெகதீசன் நெறி தவருதவர். கீழ் உத்தியோகத்திலிருந்து உயர்த்தப்பட்டவர். சிறைக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய கட்டங்களிலெல்லாம் அன்பினுலும், உருக்கமானபேச்சுக்களாலும்அமைதி கண்டவர் என்ற புகழ் அவருக்கு இருந்தது. மனச்சான்றுக்குப் புறம்பாக அவர் எதையும் செய்வதில்லை. ஆனல், வீரணன் கூறிய வழக்கு விபரம் அவர் உள்ளத்தைக் குடைந்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

### ‘குரலூரானே’ உமக்கு நாக்கு ஒன்ரு? இரண்டா?

“தி.மு. கழகத்தினர் விலைவாசி உயர்வுப் போராட்டத்தை நடத்தி தாங்கள் வலுவுள்ள கட்சி என்பதை வெளிப்படுத்திக் கொண்டதால்தான் அரசாங்கம் இப்போது பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது.”

கு. கா. தலைவர்
—சம்பத்
செய்தி ‘தமிழ் நாடு’
18—2—63

“உங்கள் மறியலைப் பார்த்து நாடே சிரித்தது. உங்களைப்பற்றி ஏதோ நினைத்துக்கொண்டிருந்தடெல்லிக்காரர்கள் நன்ருக எடை போட்டுவிட்டார்கள். ப்பூ! இவ்வளவுதான என்று!”

கு. கா. தலைவர்
—சம்பத்
செய்தி:
‘தென்றல் திரை’
18—2—63

மறியல் போராட்டத்தின் மூலம் தி. மு. கழகத்தின் வலிவைத் தெரிந்துகொண்டுதான் டெல்லிக்காரர்கள் கழகத்தைச் சட்டம் போட்டு அடக்கப் பார்க்கிருர்கள் என்பதாக ‘தமிழ்நாடு’ இதழில் வெளியாகிருக்கும் சம்பத் பேச்சு கூறுகிறது. இல்லை இல்லை நாடே சிரித்த உங்கள் மறியலைப் பார்த்து ப்பூ இவ்வளவுதான உங்கள் சரக்கு என்று டெல்லிக்காரர்கள் சாதாரணமாக எடை போட்டுவிட்டார்கள் என்று ‘தென்றல்திரை’யில் வெளியாகியிருக்கும் பேச்சு கூறுகிறது. இதில் எது சரி? குரலூரானே மயக்கம் தெளிந்த பிறகு பதில் சொல்!

# உன்னைத்தான் கேட்கிறேன் யார் நீ?

முரணான தத்துவத்தின் முதல்வா!

தவருன விளக்கத்தின் தலைவா!

வெறிகொண்ட உணர்ச்சியின் செல்வா!

போலித் தலைமை பெற்ற புலவா!

என்னுடன் வாழ்ந்து விட்டுப் போன நண்பா- **உன்னைத் தான் கேட்கிறேன் யார் நீ?**

முந்தாம் நாள்வரை நீ, முட்டைக்குள்ளிருந்தாய் என்பது உண்மை.

நேற்று வெடித்து வெளியில் வந்தாய் என்பது கண்பார்த்த நியாயம்.

இன்று நீ, குஞ்சு என்பது மெத்தவும் சரி.

நாளை நீ, கோழியென்பது வளர்ச்சியின் வேகம் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

நாளை கூரை மீது நின்றுகொண்டு கூவ இருக்கும் கோழிக்கு எந்தவித அரசியல் வடிவமும் கொடுக்க வேண்டாம் என குரல் கொடுக்கிறது இன்றைய கோழிக்குஞ்சு.

கோழிக்குஞ்சே! கோழிக்குஞ்சே! குப்பையைக் கிளறும் கோழிக்குஞ்சே—அரசியல் அவதாரத்தை நீயாக எடுத்துக் கொள்ளுகிருயே தவிர உனக்கு யாரும் தேடிவந்து கொடுப்பதில்லை.

நீ, கூவி அரசியல் உலகம் ஒரு நாளும் விடிந்ததில்லை.

நீ என்னேடு வாழ்ந்த நாளில் வெளியில் சுற்றிப்பறந்து கூட்டுக்குத் திரும்பும்பொழுது எத்தனை வம்புச் சண்டைகளை விலைக்கு வாங்கி வருவாய்; எதிரியை உண்டாக்கிக்கொண்டு சிறகடித்து மல்லுக்கு நிற்கா விட்டால் உனக்குத் தூக்கம் வராதே, நினைவிருக்கிறதா?

அடக்கமின்றிக் கூவுவாயே! ஆர்ப்பாட்டம் செய்வாயே மேடையேறிக் குதிப்பாயே! கொள்கைக்கே உயிரென்று குரல் கொடுத்துப் பாடுவாயே; ஞாபகமிருக்கிறதா?

அப்போதெல்லாம் உனக்கு அரசியல் வடிவம் யாரும் தேடி வந்து கொடுத்ததில்லை. நீயாக வலிய ஓடி இழுத்துப் போட்டுக் கொண்டதுதான்

அதிலே உனக்கோர் ஆசை! அந்தப் புகழிலே ஓர் மயக்கம்! கைதட்டல், மாலை, கடல் போன்ற மக்கள் வெள்ளம் இதை அடிக்கடி காண்பதிலே ஒரு மகிழ்ச்சி!

உன் திருப்திக்காக நீ அரசியலில் வலம் வந்தாயே தவிர உன்னல் அரசியல் உருப்பட வேண்டும் என நீ எண்ணியதே இல்லை.

அந்த எண்ணம் உனக்கு அப்பொழுதும் கிடையாது; இப்பொழுதும் கிடையாது; இனி எப்பொழுதும் வராது.

அரசியல் தளம் உனக்கொரு குஸ்தி மேடை. உன் காழ்ப்புகள் தீருகிறவரை அதைப் பயன்படுத்திக் கொண்டு கொக்கரித்துக் கிடப்பாய். தளத்திலே கொக்கரித்து நிற்கும் உன்னை களத்திற்கு அழைத்தால் வக்கரித்துக் கொண்டு வானில் பறந்துவிடுவாய்.

நீ, செய்கிற தவறையெல்லாம் தாங்கும் தலைமை உனக்குத் தேவை. தட்டிக் கேட்டால் **'போய் வருகிறேன் என்பாய்'**. போய்வா என்ருல் காலிலே விழுவாய்.

குப்பையில் திரியும் கோழிக்குஞ்சே! பழைய குப்பையைக் கிளறினல் உன்கதை நாறும். அரசியல் வாழ்வு போதும் என்கிருய். அஸ்தமனத்தின் எல்லை என்கிருய். வடிவம் கூட வேண்டாம் என்கிருய். அந்த வாசல் வரையிலும் வந்துவிடுகிருய். அடுத்த விநாடி ஆர்ப்பரிக்கிருய்,; அரசியல் குளத்தில் நீச்சலடிக்கிருய்-

நாளைய உலகின் குஞ்சுக் கோழியே **உன்னைத்தான் கேட்கிறேன்; யார் நீ?**

எவரையும் துச்சமாகப் பேசுவது-

எத்தனை பெரிய மனிதரானலும்தூக்கி அடிப்பது-

வார்த்தை. ஜாலங்களால் பந்தாடுவது-

தவருன செயலுக்கு விளக்கம் தருவது-

தலைக்கு மேல் போனல் மன்னிப்புக் கேட்பது-

இவை யாவும் அரசியலில் நீ துளிர் விட்ட காலத்தில் கையாண்டு வந்த கலைகளல்லவா?

சரவெடி கொளுத்திப்போடும் அந்தச் சிறுபிள்ளைத்தனம் இன்னும் மாறவில்லையா?

விலைவாசிப் போராட்டத்தின் விலைவாசியை விசாரிக்கச் சொல்லியிருக்கிருயே!

தம்பிமார்களின் தைரியத்தில் உனக்குச் சந்தேகம் வந்திருக்கிறதே?

கழகத்தின் , ஜாதகத்தைக் கணித்து முடித்திருக்கிருயே!

எவர் கொடுத்த பாலில் உனக்கு இந்தத் திடீர் வீரமும்-ஞானமும் விளைத்திருக்கிறது?

நாலாவது விரலை நீட்டி கழகத்தவர் மீது கிண்டல் மழை பொழிந்து கேள்விக்கணை தொடுக்கும்போது மூன்றுவிரல்கள் உன்னை நோக்கி மடிந்திருப்பதை மறந்துவிட்டாயா?

தன்னை மறந்து பேசுகிருயே என்றுஉன் மனச்சாட்சி தலையிலடித்துச் சொல்லவில்லையா?

உன் போராட்ட அதி தீர வீர பராக்கிரமத்கை நாங்கள் ஓயாமல் சொல்லி அழத்தான் வேண்டுமா?

எங்களை நோக்கி விலைவாசி கேட்கும்போது நாங்கள் கருப்புக்கொடியின் கதை கேட்க மாட்டோமா? அப்பொழுது பந்தயத்தில் தோற்ற டீட்டைப் போல் தலை கவிழ்த்துக் கொள்வாயா?

'திராவிட நாடு' பிறந்து வளர்ந்து புதை குழிக்குப் போய்விட்டது என்ருல் நீ அதைப் பற்றிப் பாடிய கவிதைகள் இன்னும் போகாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனவே;அதையும் அந்தக்குழிக்கு சீக்கிரமாக அனுப்பிவை!

திராவிட நாட்டிற்குத் தந்த விளக்கங்கள், அந்த நாட்டின் கீர்த்தி பற்றி கட்டி வைத்துள்ள சுவையான கவிதைகள்-திராவிடக் கலாச்சாரம் பண்பாடு- திராவிடநாடு பிரிந்தால் வாழக்கூடிய தகுதிக்கான ஆதாரங்கள் இத்தனையும் உண்டே நீ எழுதிக் குவித்து விட்டுப் போன கவிதைகளில்!

எழுதிய பாவத்திற்குப் பிராயச் சித்தமாக அதையெல்லாம் திரட்டி நெருப்பிலே இட்டுக் கொளுத்திவிட்டல்லவா திராவிட நாட்டைப் புதை குழிக்கு அனுப்பிய பஜனையை அரங்கேற்றியிருக்க வேண்டும்.

ஏன் செய்யவில்லை? எப்பொழுது செய்யப் போகிருய். சொல்? கொளுத்துவதற்குப் பெயர் போன பெரியார் மைதானத்தில் அதை எதிர் பார்க்கலாமா?

**ஒரே ஒரு கேள்வி!**

உன்னேடு வாழ்ந்தவன் கேட்கிறேன்.

உன் வீரத்தைப் புரிந்து கொண்டவன் கேட்கிறேன்,

போராட்ட காலத்தில் நீ குழம்பித் தவித்த போதெல்லாம் உன் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தவன் கேட்கிறேன்.

உன் வாழ்க்கைச் சரித்திரத்தின் சரியான பகுதியில் முறையாக உன்னைத் தெரிந்துகொண்டவன் கேட்கிறேன்.

உன் பலவீனங்களுக்கு எது பாதுகாப்பு என்பதைப் பக்குவமாகப் புரிந்து வைத்துக் கொண்டிருப்பவன் கேட்கிறேன்-

**பதில் சொல்!**

(3-ம் பக்கம் பார்க்க)

## இது என்ன குழப்பம்?

## கோழிக்குஞ்சா? குடிமகனா?

தடைச்சட்டம்வருகிறதே என்ன செய்யப் போகிருய்? என்று கேட்கிறேன். கேட்கிற நான் யார்?

திராவிடநாடு நடக்காது என்று முன்கூட்டியே சொன்னவன். நான் உன் நண்பனுமல்ல, பகைவனுமல்ல- ஒரு குடிமகன்.

உன் வீரத்தைத்தானும் தெரிந்துகொண்டு ஊருக்கும் சொல்ல விரும்பும் ஒரு குடிமகன்.

இப்பொழுது சொல்! தடைச்சட்டம் வருகிறதே என்ன செய்யப் போகிருய்?

"நான் இவ்வளவு காலமும் முட்டைக் குள்ளிருந்தது உண்மைதான்.

நான் முட்டைக் குள்ளிருந்தவன் என்று யாரும் கேலி பேசவேண்டாம்.

நேற்று நான் முட்டை!
இன்று நான் குஞ்சு!
நாளை நான் கோழி!

இந்தக் கோழிக்குஞ்சுக்கு எந்த அரசியல் வடிவமும் கொடுக்க வேண்டாம்.

—கண்ணதாசன்
'தென்றல் திரை'
18—2—63

ஒரு சமயம்:—
"நான் கோழிக்குஞ்சு என்னை விட்டுவிடுங்கள்! எனக்கு எந்தவிதமான அரசியல்வடிவமும்கொடுக்க வேண்டாம் என்று கெஞ்சுகிருர்!

மறுவிநாடி:—
நான் ஒரு குடிமகன் என் கேள்விக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமென்று அரசியல் வடிவமெடுத்து ஆர்ப்பரிக்கிருர். ஆண்டவனே நீ இருந்தால்—குழப்பமில்லாத தெளிவான புத்தியை அவருக்குக் கொடு.

# எத்தனை கொலைகள்! எத்தனை தலைகள்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றின் சில சந்தர்ப்பங்கள் பற்றி, சில அமைப்புகள் பற்றி சரித்திர வல்லுனர்களிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் எழுவது இயல்பே தவிர, மனம் போல சரித்திரத்தை மாற்றி எழுத எவரும் துணிவதில்லை.

**ஹிரோடட்டஸ்** முதல் **அர்னால்டு டோயின்பி** வரையுள்ள வரலாற்றறிஞர்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் இந்த உண்மை எளிதில் விளங்கும்.

சீமான்களும், மன்னர்களும் தங்களைப்பற்றிய சரித்திரத்தை உருவாக்கியிருக்கிறார்களே தவிர, கடந்த நாள் வரலாற்றை எவரும் களங்கப்படுத்தியதில்லை. மனித குலத்தின் வெற்றி தோல்விகளும், அனுபவக்கூறுகளும் அவ்வப்போதைய வாழ்க்கை நெறி முறைகளும் உள்ளது உள்ளபடி இருப்பது நல்லது.

பரையிடம் அனுதாபத்தோடு நடந்துகொண்டார்கள்.

**மகா பீட்டர், பயங்கர இவான்** போன்ற பேரரசர்களை சரித்திரம் 'மகத்துவங்களோடு' சித்தரித்தது. இன்னும் சொல்லப் போனால், அவர்களது அற்புத வாழ்க்கையை விளக்கிட சில 'ஐதீகக் கதைகளும், சரித்திரத்தில் இடம் பெற்றன. இதற்கு மிகமிகப்பிரசித்திமான காரணமுமிருந்தது.

ஸ்டாலின் தன்னுடைய பாணியில்— தன்னைப்போலவே— அந்த மன்னர்களை வார்த்தெடுக்க விரும்பினன். அதாவது தன்னுடைய மகத்தான பிரதாபங்கள் அவர்களுடையது போல இருப்பதாகக் காட்டிக்கொள்ளவதில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டான்!

இறந்த காலத்தில் கூட தன்டனுடைய 'பிரதிபலிப்புகள்' தென்பட வேண்டும்' என்றால் டால், அவன் ஒரு மனித உரு செய்து, அதிலே மந்திரங்களைப் பிரயோகித்து, சில ஆணிகளை அந்த உருவில் அடிப்பான்; குறிப்பிட்ட வேண்டாதவன் காலப் போக்கில், மந்திரத்தின் வலிமையால் அழிந்தே போய் விடுவான்!

அதாவது, மந்திரங்களால் தனி மனிதன் உருவிலே பிரவேசித்து, அந்த உரு பாதிக்கப்படும்போது தனி மனிதனும் பாதிக்கப்படுகிருன் என்ற நம்பிக்கை.

வேண்டாதவனின் 'சிம்பள், அந்த உரு! நம்பிக்கையை முதலில் அழித்துவிட்டு, தனி மனிதனை அழிப்பது மாந்தரீக முறை; கம்யூனிஸ முறை இதிலிருந்து சிறிதளவே வேறுபடுகிறது.

கம்யூனிஸ்டுகள் தனி மனிதனை முதலில் 'காலி' செய்துவிட்டு, பிறகு, அவன் விட்டுச் முழுக்க அழிக்கப்படுகிறது. அவர்களது பெயர்களால் எழுந்த நினைவு மன்றங்கள், சவக் கூடங்கள், பொதுவிடுதிகள் அனைத்தும் ஒரே இரவில் பெயர்மாறி காட்சியளிக்கின்றன.

இத்தனை 'தகடுதித்தங்கள்' எதற்காக? எல்லாம், வல்லமை மிக்க தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுக்காக! இந்த வரிகளை வைத்துக்கொண்டு எப்படிப்பட்ட 'அபத்தங்களையும்' கூசாமல் செய்துவிட கம்யூனிஸ்டுகள் தயங்கியதேயில்லை.

எப்போதாவது சிலருக்கு மனசாட்சி விழித்துக்கொண்டால், அவர்கள் ஓரளவு தயங்கினல், அவர்கள் பிற்போக்கு வாதிகளாகிவிடுவார்கள்!

வத்திக்கான் போப்பாண்டவர்கள், ஆண்டுதோறும் பகிஷ்கரிக்க வேண்டிய நூற்களின் பெயர் பட்டியலை புனித கிருத்துவர்களுக்காக வெளியிடுவதைப் போல, கம்யூனிஸ்டு வையமும் 'பிற்போக்கு வாதி'களின் பெயர்களை அவ்வப்போது வெளியிடுகிறது.

# இரும்புத்திரைக்குள் எவ்வளவோ கதைகள்!

கட்சிக்காக, நாட்டுக்காக, ஜனநாயகத்துக்காக வேறு எதை வேண்டுமானாலும் செய்யலாம்; சரித்திரத்தை மாற்றுவதை மட்டும் மன்னிக்க முடியாது!

வீரனைக் கோழையாகவும், கோழையை வீரனாகவும், சித்தரித்துத் தீட்டப்படும் 'வரலாற்றில்' அலங்கோலத்தைத் தவிர வேறு எதுவுமே இருக்காது!

உலகத்திலே முதன் முதலாகப் பெரிய அளவில் சரித்திரம் திருத்தப்பட்டது சோவியத் ரஷ்யாவில்தான்! போல்ஷிவிக்குகள் ஆட்சிக்கு வந்ததும், பழைய ஜார் பரம்பரையும், ரஷ்புடீன் கும்பலும் சேர்ந்து குவித்துப் போட்டபொய்மைக் கதைகளை நின்று, நிதானித்து ஆராய்ந்து பார்த்து, உண்மைகளை சலித்தெடுத்து சரித்திரம் தொகுக்கவில்லை. தங்களது ஆசாபாசங்களும் வேட்கை, வெறுப்புகளும் அப்படியே பிரதிபலித்திடும் தன்மையில் அவர்கள் புதிய சரித்திரத்தை சிருஷ்டித்தார்கள். மக்களின் தவறுகள் மறைக்கப்பட்டன; அவர்களது பழங்கால வெற்றிகள் தோல்விகளாக்கப்பட்டன. அவர்களுக்காக உழைத்த உத்தமர்களின் திருப்பெயர்கள் 'இருட்டடிப்பு' செய்யப்பட்டன! அந்த இடங்களிலே புதிய பெயர்கள் வரலாறுகள் புள்ளிவிவரங்களோடு விளக்கப்பட்டன!

ஒரு விஷயத்தில் மட்டும் கம்யூனிஸ்டுகள் நன்றியுணர்ச்சியோடு நடந்துகொண்டார்கள். சரித்திரம் திருத்தப்பட்ட போது அவர்கள் ஜார் பரம் சரித்திரத்தை மாற்றி எழுதாமல் என்ன செய்வது?

இந்த 'படுபாதகங்கள்' எல்லாம் மகத்தான **'தொழிலாளர் வர்க்கத்திற்காக'** செய்து முடிக்கப்பட்டன.

சரித்திரபிரசித்தமான சில 'சுத்தீகரணங்களுக்கு'. இந்த புதிய வரலாறுகள் துணை நின்றன.

பாமரர்களுக்கு ஒரு நம்பிக்கையுண்டு. வேண்டாதவர்களைப் பற்றிய விபரங்களை மந்திரவாதியிடம் சொல்லிவிட் சென்ற சுவடுகளையும், நம்பிக்கையையும் அழிக்கிருர்கள்!

மெக்ஸிக்கோவில், பனிபிளக்கும் கோடாரியால் சிதறடிக்கப்பட்ட டிராஸ்கியிலிருந்து, நெல்லைச் சீமையில் கொலையுண்ட நடராசன் வரையுள்ள தனி மனிதர்கள் கம்யூனிஸ மாந்திரீக முறைக்குப் பலிப்பொருளான சேதிகளையே நமக்குத் தெளிவுபடுத்துகிருர்கள்!

இப்படிப் பலிப்பொருட்களானவர்களின் பழங்கால, சிறப்பு மிக்க சரித்திரம் முழுக்க

## புளுகுணித் தலைவா— பொய்யிலே புரளாதே!

"பிரிவினைதான் கேட்கிறோம் என்று அண்ணுதுரை ஏன் வலியுறுத்தவில்லை என்று நான் சென்னையில் ஒரு கூட்டத்தில் கேட்டேன். அதே கேள்வியை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த ஒரு கூட்டத்தின்பொழுது அண்ணுதுரையிடம் ஒரு மாணவர் கேட்க—அதற்குப் பதில் சொல்லாமல் "நீ யார்?" நண்பனு என்று கேட்கிருர் அண்ணுதுரை. நண்பனே விரோதியோ கேட்ட கேள்விக்குப் பதில் இல்லையே!"

—**சம்பத்**

*தென்றல் திரை, 18-2-63.*

பச்சையப்பன் கல்லூரியில் கூட்டம் நடந்தது உண்மை. அங்கே அறிஞர் அண்ணு அவர்கள் பேசும் போது மாணவர் யாரும் எழுந்து கேள்வி கேட்கவில்லை. வெளியிலே ராஜ்யசபைப் பேச்சை எடுத்து வைத்துக் குழப்பிக் கொண்டிருக்கும் கருத்துக் குருடர்களைப் பார்த்துதான் யார் நீ—? நண்பனு, மாற்றுனு, இரண்டுங் கெட்டானு? என்று கேள்வி கேட்டாரே தவிர மாணவர்கள் கேள்வி கேட்கவுமில்லை—அதற்கு அண்ணு இப்படிப் பதில் சொல்லவுமில்லை.

த. தே. க. தலைவரின் பேச்சைப் படித்த ஒரு பச்சையப்பன் கல்லூரி மாணவர்—"இவருக்கும் ஒரு கட்சியா? இதுவும் ஒரு ஜென்மமா என்று காரித்துப்புகிருர்.

இந்தப்பட்டியலில் பிரசித்தி பெற்ற பொதுப்பணியாளர்கள். எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் எல்லோரும் அடங்குவார்கள்! தாங்கள் எடுத்தாண்ட இலட்சியங்கள் ஏதோவொன்றிற்காக 'பயன்படுவதைப் பார்த்து மனம் குமுறி எழுந்த இவர்கள், கம்யூனிஸ வையத்தின் பயங்கரத்திற்கு மிகச் சிறந்த ஆதாரங்களைத் தந்திருக்கிருர்கள்!

**டிராஸ்கி, காகரின், செப்பிலோவ், ஹவ்வேர்டு பாஸ்ட், ஹலாஸ்கோ, போரிஸ் பாஸ்டர் நாக், கவிஞர் மயகோவஸ்கி** இப்படி ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது!

இருபதாம் காங்கிரசிற்குப் பிறகு குருசேவ் என்னதான் 'யோக்கியராக' காட்சியளித்தாலும் பாஸ்டர் நாக்கை அவர் படுத்தியபாடு மறக்கக் கூடியதல்ல! **'டாக்டர் ஷிவோகா'**வின் கையெழுத்துப் பிரதியை இத்தாலி நூல் வெளியீட்டாளரிடமிருந்து திரும்ப வாங்க, குருசேவ் செய்த 'சரித்திர பிரசித்தமான பராக்கிரமங்கள்' ஒரு சிறந்த கேலிச் சித்திரத்தையே தயாரித்துக் கொடுத்திருக்கின்றன.

இத்தனைக்கும் பின்னலே, 'டாக்டர் ஷிவோகா' வெளியான பிறகு அதற்கு நோபல் பரிசு கிடைத்தது!

(10-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெகதீசன் பிரம்பைப் பிடித்தபடி ஒரு கணம் சிலையாக நின்றார். உடலைப் போர்த்தியிருந்த உத்தியோகச்சட்டை அதில் தொங்கிய புகழ்ப்பட்டயங்கள் முதலியவைகளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார். அதன் பிறகு அவர் வாய் அசைந்தது.

"வீரனு, இதெல்லாம் சட்ட விரோதம்! எனது உத்தியோக கௌரவத்திற்கு உகந்ததல்ல! போய்விடு! எழுந்து ஓடிவிடு"! என்று சம்பிரதாயத்திற்காக முகத்தை நெருப்பாக்கிக் கொண்டு பேசிவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிட்டார் ஜெகதீசன். அவர் உள்ளத்தில் மறு ஏற்பட்டது போன்ற ஒருசிறு உணர்ச்சியுடன் அவர் பங்களாவுக்குப் போய்விட்டார்.

வீட்டில் திலகவதி அம்மையார் மகனுக்காக எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

"ஜெகதீசா!"

"அம்மா!"

"ஏன் இவ்வளவு தாமதம்?"

"அதிகாரிகள் எப்போதுமே கோபமாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பணியாளர்களிடத்தில் மரியாதையை எதிர் பார்க்கக் கூடாது."

"என்னப்பா அப்படி நடந்து விட்டது?"

"எனது உத்தியோக காலத்தில் நடக்காத ஒன்று இன்று நடந்துவிட்டது! ஒரு கைதி, வேறுயாருமில்லைசெவந்திமாலையின்புருஷன்,ஒருமணிநேரம் ரகசியமாக வெளியே வந்துபோக அனுமதி கேட்டுவிட்டான்."


"கேட்டாலென்ன! அவன் ஆயுள் கைதி! இனி அவனுக்கு வாழ்க்கை இல்லை! நீ இரக்கமுள்ளவன் என்று கேட்டிருக்கிறான். தவறு ஒன்றுமில்லையே ஜெகதீசா.!

"அம்மா, நான் சட்டப்படி நடக்கமாட்டேன், வளைந்து கொடுத்துவிடுவேன் என்று குறைத்து என்னை எண்ணியிருக்கிறான் அவன்!"

"ஐயோ ஜெகதீசா, அவன் அப்படி நினைத்திருக்கவேமாட்டான். அவன் மனைவியைத் தெரியுமே உனக்கு! அவளும் அப்படிபட்டவளல்ல. வீரணன் உன்னைக் கேட்டிராவிட்டால் நான் உன்னைக் கேட்டிருப்பேன்."

"அம்மா!"

"ஆம்; அவர்களது விடுதலை கண்ணுக்குத் தெரிகிறது.



தேவர் பிலிம்சாரின் "தர்மம் தலைகாக்கும்" வெற்றிப் படத்தில் சிறப்பாக நடித்துள்ள எம். ஆர். ராதாவும், பி. கே. மோகனும்.

அதை நாம்தான் எடுத்துக் கொடுக்க வேண்டும். ஒரு மணி நேரம் வேண்டாம். ஜெகதீசா, ஒரு நாழிகை போதும்!" திலகவதி அம்மையார் மகன் தன் பேச்சைக் கேட்பான் என்ற நம்பிக்கையில் சிரித்துக் கொண்டே பேசினார்.

"அம்மா! அது மட்டும் நடக்காது! அரசாங்கம் என்மீது நம்பிக்கை வைத்து ஆயிரம் கொலைக் கைதிகளை ஒப்படைத்திருக்கிறது. நான் அரசாங்கத்திற்கு ஒரு போதும் துரோகம் செய்யமாட்டேன்."

தம்பீ, அவர்களது வழக்குத் தெரியுமா உனக்கு! விசித்திரமான வழக்கு! உன்னைப்போல் எல்லா அதிகாரிகளும் நீதிமான்களாக இருந்திருந்தால் வீரணனுக்கும் செவந்திமாலைக்கும் தண்டனையே கிடைத்திருக்காது. செத்துப் போனதாகச் சொல்லப்பட்டவன், உயிரோடிருக்கிறான். எந்த நீதிபதி இவர்களுக்குத் தண்டனை கொடுத்தார்? எப்படிக் கொடுத்தார்? ஜெகதீசா! உன்னைப்போல் நான் பட்டப்படிப்பு படிக்கவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் கவனத்தில் வைத்துக் கொள்! உன்னைப் போன்ற ஒரு பெரிய அரசாங்க அதிகாரி தவறாகநீதிசொன்னதை மாற்றி, உண்மையான நீதியை நிலை நாட்ட வேண்டுமானால் நீ தவறாமல் இந்த உதவியைச் செய்யத் தான் வேண்டும். அவன் தப்ப மாட்டான் என்பதற்கு நான் பொறுப்பு" திலவதி அம்மையார் உருக்கமாகப் பேசினாள்.

"அம்மா! கடமையில் தவறாதே என்று அறிவுறுத்தும் நீங்களா அம்மா இப்படிப் பேசுகிறீர்கள்!"

"நான் தான்!- பேசவில்லை. பெற்ற மகனிடத்தில் மண்டியிட்டுக் கேட்கிறேன்"

"அம்மா!"

"பேசாதே ஜெகதீசா! எனக்காக அதைச் செய்" என்றாள் திலவதி அம்மையார்.

ஜெகதீசன் முகத்தைச் சுழித்துக்கொண்டே மாடிக்குப் போய்விட்டான்.

பங்களாவில் அமைதி நிலவியது. மாடியில் சிகரெட் புகைந்துகொண்டே இருந்தது. சாப்பிடுவதற்குக்கூட ஜெகதீசன் கீழே இறங்கவில்லை.

மறுநாள் இரவு. காவல்காரன் ஒன்பது மணி அடித்தான். காவலர்கள் மதிலோரமாக ரோந்து சுற்றிக்கொண்டிருந்தார்கள். வீரணன் மட்டும் கொட்டடியிலிருந்து அழைத்து வரப்பட்டான். அவன் உள்ளம் குழம்பியிருந்தது. முதல் நாள் செய்த தவறுக்குத் தண்டனை கிடைக்கப் போகிறது என்று அரண்டுகொண்டே நடந்து வந்தான்.

"வீரனு!"

"எசமான்!"

"பங்களாவுக்கு வெளியே போகக் கூடாது. சரியாக பத்து மணி அடிக்கும்போது நீ கோட்டைக்குள் இருக்க வேண்டும்! போ!" என்று தலையைக் கவிழ்த்துக்கொண்டே சொன்னார் அதிகாரி! கடமையில் தவறிவிட்டதாக அவருக்கு மனம் உறுத்தியது. கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

## பெரும் பயணம்

**கவிஞர் "சுரா"**

தோளு யர்த்தி வாளு யர்த்தி
தொகை தொகையாய் படை நடத்தி
சூளுரைப்போம்! சுடர்முகம் தூக்கி
பகை முடிக்க பாய்ந்தெழுந்து
நாளுரைப்போம்! இந் நாடெல்லையில்
புகைபோலும் புகுந்திட்ட சீனரடக்கி
தாள் பணிய வைக்கும் வரை
வகையான அறப்பணியை வளர்த்திடுவோம்!

தத்துவத்தின் தலைமகனார் அறிஞர் அண்ணா
தரும்பணியை பெரும் பணியாய் ஏற்ற நாமே
கத்துகின்ற காட்டெருமை தவளைக் கூச்சல்
கடுகளவு காதுகளில் ஏற்பதுண்டோ?
வித்தூன்றி அரும்பணியால் கழகம்; ஆல்போல்
விழுதூன்றி தழைக்கின்ற புகழ் கோலங் கண்டு
பித்தரென்போர் ஏதேதோ பேசுகிறார், கவலையில்லை
பெரும்பயண முயர்ச்சியிலும் அயர்ச்சியில்லை!



# 'பாஸ்டர்நாக்'கைப் பழித்த பாவிகள்!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

குருசேவின் கூற்றுப்படி பிற்போக்குவாதிகள் அந்த நூலுக்குப் பரிசு வழங்கினர்கள் என்றே வைத்துக் கொண்டாலும், ஆண்மையுள்ள குருசேவ் பரிசினை வாங்க பாஸ்டர் நாக்கை அனுமதித்திருக்க வேண்டும்.

ஒரு நிகரற்ற சிந்தனையாளனை சோதனைக் குள்ளாக்கியதற்கு குருசேவினல் எந்தவித சமாதானமும் சொல்ல முடியவில்லை. 'முதலாளித்துவ சதி' 'பிற்போக்குத்தனம்' எனும் இரண்டொரு சொற் பிரயோகங்களைத் தவிர.

சாவுகூட பாஸ்டர் நாக்கை திடீரென்றுதான் தொட்டுவிட்டது. சாவதற்கு முன்னலே அவன் எழுதிய ஒரு கவிதை, கதிரொளிக்காக ஏங்கித் தவித்திடும் சின்னஞ்சிறு உயிரனுவின் உணர்ச்சிக் கொதிப்புகளை அப்படியே பிரதிபலிக்கிறது!

ஒரு எழுத்தாளன் உயிர்வாழ எவை தேவையோ, அவை அனைத்தும் பாஸ்டர் நாக்கிற்கு புறக்கணிக்கப்பட்டன! எழுத்தாளர் சங்கத்திலிருந்து அவன் விலக்கப்பட்டான்! இல்லாத பழி சொல்லி அவனை வதை செய்தார்கள்!

ரியரான **ஹவார்டு பாஸ்ட்** தமது முன்னுரையில் இப்படி எழுதியிருக்கிருர். அவரை அமெரிக்க மக்களின் மகத்தான மனசாட்சியாக; சித்தரித்த சோவியத் விமர்சகர்கள் பிறகு அவரை டாலர் ஏகாதிபத்தியத் திற்குமயங்கிப் போன பிற்போக்கு வாதியென வசை பாடினர்கள். இத்தனைக்கும் காரணம் ஹாவார் பாஸ்ட் எழுதிய **'நிர்வாண தேவதை'** என்ற நூல் கம்யூனிஸ சித்தாந்தங்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை!

இலக்கியம் உண்டே தவிர, 'கம்யூனிஸ இலக்கியம்' என்ற ஒன்று தனியாகவா இருக்கிறது, எனும் ஐயப்பாடு எழுவது இயற்கை. இங்கேதான் கம்யூனிஸ்டுகள் திறமைசாலிகள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது தங்களுக்கே உரிய போக்கில் அவர்கள் எதிரிகளையும் சிந்திக்க வைத்துவிடுகிருர்கள்!

எடுத்துக்காட்டாக 'மார்க்சீயமும் இலக்கியமும்' என்ற தலைப்பை எடுத்துக்கொள்வோம்.

உள்ளபடியே தசாவதாரத்திற்கும் டார்வின் பரிணம தத்துவத்திற்கும் எந்த அளவு ஒற்றுமை இருக்கிறதோ, அதை

டுரைகளில் மேற்கோள் காட்டியிருக்கிருர். **ஹென்றிக் ஹினேயை** இலக்கியத் திறனுக்காக பாராட்டினலும், அவரது அரசியல் கருத்துக்களை மார்க்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. ஹினேயைப் போன்ற மகத்தான கவிஞனை அரசியல் அளவுகோல் கொண்டு நிதானிப்பது தவறு என்பதை மார்க்ஸ் தெரிந்து வைத்துக் கொண்டுதானிருந்தார்.

கலைக்கும், மார்க்சுக்குமுள்ள தொடர்பின் இன்னும் ஒரு பகுதியை வேண்டுமானல் குறிப்பிடலாம். இளமையில் மார்க்ஸ் சில சிருங்கார கவிதைகளை எழுதி பிற்காலத்தில் தமக்கு மனைவியாக விளங்கிய பெண்ணுக்கு அனுப்பியிருக்கிருர்! இலக்கியத்திற்கும், மார்க்சிற்கும் இதைவிட பெரிய தொடர்புகள் ஏதும் இருந்ததில்லை. சிறந்த இலக்கிய ஆராய்ச்சியாளனுவதற்குரிய திறனும், ரசனையும், ஆற்றலும் மார்க்சிடம் நிரம்ப இருந்தன.

காரல் மார்க்சிற்கும் கலைக்கும் இதைவிடப் பெரிய அளவில் தொடர்புகளே இல்லை. எனினும் இதுபற்றி **டிராஸ்கி, பெலக்னேவ்** போன்றவர்கள் எழுதிய நூற்களை கம்யூனிஸ்டு

வரை ஸ்டாலினுக்கு உண்மையிலேயே ஒற்றை மொழியைத் தவிர வேறுஒன்றும் தெரியாது!

மா-சே-துங்கின் சங்கதியில் சிறிது மாறுபாடு உண்டு. அவர் சில 'கவிதைகளையாவது எழுதியிருக்கிருர். பரந்த உலகை ஏடாக்கி, பாட்டாளிகளின் உள்ளத் துடிப்பை மையாக்கி வரைந்த 'காயடிக்கப்பட்ட' கவிதைகள் அனைத்தும்!

மா-சே-துங்கை கவிஞனுக ஏற்றுக்கொண்டுவிட்டால் கவிஞனுக்குரிய 'இலக்கணத்தையே மாற்றிக்கொள்ளவேண்டியதுதான்! கரிபால்டி கூடத்தான் சில குருட்டுக் கவிதைகளை எழுதியிருக்கிருர்; இத்தாலியின் விடுதலை வீரராக அவர் உலகுக்கு அறிமுகமானரே தவிர, கவிஞனுக அல்ல!

உலகக் கம்யூனிஸ்டு தலைவர்களை கலைஞர்களாகக்காண்பது, அவர்களை கலைஞர்களாக்க முயற்சிப்பது, இரண்டும் நிச்சயமாகப் போக்கிடமற்ற தன்மையைத்தான் பிரதிபலிக்கும்!

உலகத்தின் தலை சிறந்த சிந்தனையாளர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்ட ஒரே கட்சி என்ற பெருமையை கம்யூனிஸ்டு கட்சி பெற்றிருக்கிறது. சாத்தான் வேதத்தை மேற்

# 'நாகி'யின் சாவுக்கு வாய்த்த எமன்கள்!

உலகமெல்லாம், பலமொழிகளில் 'டாக்டர் ஷிவோகாவை' படித்து மகிழ்ந்துகொண்டிருந்த போது, அங்கே தொலைவில் சோவியத் சொர்க்க பூமியில் ஒரு சின்னஞ்சிறு வீடுதியில், பாஸ்டர் நாக்கின் உயிரொளி ஒடுங்கிக்கொண்டிருந்தது.

''எத்தனை தாழ்ந்த எழுத்தாளனும் சரி, அவனும் மனசாட்சியின் சிருஷ்டியே. அவனும் அவன் உள்ளும் உண்மையொளி காண்பதற்கே வெதும்புகின்றன... ஒரு எழுத்தாளன் கலைஞன் என்றநிலையில் ஏதேச்சாதிகாரத்தின் பாதங்களினடியில் சிக்கி அழியத்தான் வேண்டுமா என்பதே இன்று புதிய நாகரீகத்தின் முன்னுள்ள பெரும் பிரச்னை. உரிமையுணர்ச்சி தடைபடும்போது இலக்கிய மேன்மை உயிரற்றுப் போகிறது என்பது நிச்சயம். ஆதிக்க அமைப்பில் ஒரு மருத்துவன் தன் அலுவலில் மனம்போல் ஈடுபடலாம்; ஒரு இன்ஜீனியர் தன் இயற்கை பண்புப்படி பணிபுரியலாம்; ஒரு தொழிலாளிகூட உற்பத்தியில் தனக்குரிய சிறப்பான பங்கை செலுத்தலாம்... ஆனல் ஒரு எதேச்சாதிகார அரசு எழுத்தாளனிடம் வலியுறுத்திப் பெற நினைப்பது எது அவன் கலைத்தன்மைகளுக்கு முரணாக இருக்கிறதோ, அந்த அடிமைப் புத்தியைத்தான்!''

பிரபல அமெரிக்க நாவலாசி

விடக் குறைவான ஒட்டுதல் உள்ள இரண்டு கூறுகள்தாம் மார்க்சியமும் இலக்கியமும்! எனினும் இதனை மறுக்கும் மாற்றுக் கருத்தினர்கள் கூட கம்யூனிஸ்டுகளது பாணியில் சிந்தித்துவிடுவதால் அவர்களும் மார்க்சீயத்தையும், இலக்கியத்தையும் குறித்து காரசாரமான விவாதங்கள் புரிகிருர்கள்!

ஆக, மார்க்சியத்திற்கும் இலக்கியத்திற்கும் மாற்றமுடியாத ஏதோவொரு 'பந்தத்துவம்' உண்டு என்ற பொய்யான தோற்றமே ஏற்பட்டுவிடுகிறது. பாதி வெற்றி கம்யூனிஸ்டுகளுக்கு கிடைத்துவிடுகிறது.

உள்ளபடியே மார்க்ஸ் தம் வாழ்நாள் முழுதும் சிறந்த இலக்கிய ரசிகராக இருந்தார் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஷேக்ஸ்பியரது நாடகங்களும், கிரேக்க துன்பியல் நாடகங்களும் தாந்தேயின் கவிதைகளும் மார்க்ஸை வெகுவாக கவர்ந்திருந்தன. சில பகுதிகளை அப்படியே அவர் மனப் பாடமாக்கியிருந்தார். யவன புராணங்களை அவர் தமது கட்

கள் ஏற்றுக் கொள்வதில்லை; ஏனென்ருல் இவர்கள் பிறகு பிற்போக்குவாதிகளாகி விட்டார்கள்!

மற்றபடி கலைக்கும் மார்க்சியத்திற்குமுள்ள இணைப்பை எடுத்துக்காட்ட லெனின், ஸ்டாலின், ஷடனேவ், மா-சே-துங் ஆகியோரது பொன் மொழிகளைவிட்டால் கம்யூனிஸ்டுகளுக்கு வேறு கதியில்லை! இவர்களை கலைஞர்கள் என்று முழு முட்டாள் கூட சொல்லமாட்டான்! ஆனல் கம்யூனிஸ்டு கலையும் கம்யூனிச இலக்கியமும் எப்படி இருக்கவேண்டும்என்று தீர்மானிக்கும் போதகாசிரியர்களே இவர்கள்தான்! இவர்களுடைய கருத்தை அப்படியே ஏற்று எழுதப்பட்ட தூற்றுக் கணக்கான பாஷ்யங்கள், விமர்சனங்கள் தினமும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

லெனின் தன்னைப்பற்றி அதிகமாக விளம்பரப்படுத்திக் கொள்ளாதவர்; ஸ்டாலின் அப்படியல்ல! சீடகோடிகளால் அவர் 'சர்வகலாவல்லவராக' சித்தரிக்கப்பட்டார். வீர வினையாட்டிலிருந்து, வாத்திய இசை

கோள் காட்டுவதைப் போல கம்யூனிஸ்டுகளும் மார்க்சியத்தைத் தாராளமாகப் பயன்படுத்துகிருர்கள்!

தன்னந்தனியாக, மங்கிய ஒளியில் அமர்ந்து, வாழ்நாள் முழுதும் சேகரித்த சிந்தனைகளை சோர்ந்துவிடாமல் எழுதிக்குவித்த காரல் மார்க்ஸ் தனது எண்ணங்கள் இப்படி ஒரு பயங்கரப் புயலை விளைத்திடும் என்று நினைத்துப் பார்த்திருப்பாரா, என்ன?

மார்க்ஸ் எழுதிய ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு படுகொலை நடந்திருக்கிறது.

அவன் தீட்டிய ஒவ்வொரு அத்தியாயமும் வரலாற்றில்ஒவ்வொரு ரத்தக்களரியை வடித்துக் காட்டியிருக்கிறது!

ஏசுவுக்குப் பின் யூத இனத்தில் தோன்றிய மிகப் பெரும் சிந்தனையாளன் மார்க்ஸ். எதிரிகள்தான் ஏசுவை சிலுவையிலடித்துக் கொன்ருர்கள்; மார்க்ஸை விட்டுவிட்ட அவரது சீட கோடிகள் அவரது தத்துவங்களை ஒரு நூற்றுண்டாக சிலுவையிலேற்றி சித்திரவதை செய்கிருர்கள்! ஏசுவிற்காவது ஆறுதலுக்கு வழி இருந்தது. ''பிதாவே! இவர்கள் செய்வது என்னவென்பதை இவர்கள் அறியவில்லை!'' என்று கருணையோடு பிரார்த்தித்திட நேரம் கிடைத்தது. மார்க்சிற்கு அந்த வாய்ப்புக் கூடக் கிடைக்கவில்லை.

**வீணடிக்கும் மனப்பான்மையை
விட்டொழியுங்கள்
அதிகச் செலவை அறவே அகற்றுங்கள்
நாட்டின் பலம் அதிகரிக்க உழையுங்கள்**

# ?...பதில்!

கே: பிரிவினைத் தடைச்சட்டம் தமிழ் தேசீயக் கட்சியைப் பாதிக்காது என்று சம்பத் எழுதியிருக்கிருரே அதன் பொருள் என்ன?

ஆர். டி. எம்.
சென்னை-14.

ப: வர இருக்கும் பிரிவினைத் தடைச் சட்டம் தி. மு. கழகத்தின் திராவிட நாடு கொள்கைக்கு மட்டுமல்ல, இந்திய யூனியனிலிருந்து எந்தப் பகுதியும் எந்த முறையில் பிரிந்து போக விரும்பினுலும் வர இருக்கும் சட்டம் அந்த உரிமைக்கு தடைக்கல்லாக அமையும். விரும்பினுல் பிரிந்துபோகிற எண்ணம் கொண்ட த. தே. க.வை மட்டும் அந்தச் சட்டம் எப்படிப் பாதிக்காமல் இருக்கும், இதிலிருந்து தெரியவில்லையா அந்தக் கோமாளிகள் தடைச் சட்டத்திற்குப் பயந்து கொள்கையை கை கழுவி விட்டார்கள் என்பது. தமிழ் நாட்டின் அவமானச் சின்னம் த. தே. க. "பைத்தியக்காரன் பின்னேயும் நாலுபேர்" என்ற பழமொழி சம்பத்திற்கு மெத்தப் பொருந்தும்.

கே: அண்ணன் எம். ஜி. ஆர். அவர்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன் இதற்கு தங்கள் உதவி கிடைக்குமா?

எம்.. பலராமன்
சென்னை-21.

ப: எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இப்பொழுது ஒரு நிமிடம் கூட ஓய்வில்லையே. அவர் எங்காவது பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்பொழுது அதைப் பயன்படுத்திக் கொண்டு புகைப்படமெடுத்துக் கொள்ளுங்கள். அவருக்கு நாம் கொடுக்கும் இது போன்ற அன்புத் தொல்லைகளை எவ்வளவு குறைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொள்வதே நலம்.

கே: அறிஞர் அண்ணா அவர்கள் 'ஜார்' மன்னனைப் போல் பேசுவதாக சம்பத் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிருரே அது பற்றி தங்கள் கருத்தென்ன? அண்ணா அவர்களை ஜார் மன்னன் என்று நாத்திமிரோடு பேசும்- தென் சென்னையில் புகுந்து மூக்கறுபட்ட அந்த மூதேவியை நாம் எப்படி அழைக்கவேண்டும்?

கோ. கண்ணன்
அண்ணாமலைநகர்.

ப: குலமகளைப் பற்றி குடிகாரன் சொல்லும் அபிப்பிராயத்தை யார் ஏற்றுக் கொள்ளுவார்கள். கழகத்திலிருக்கும்பொழுதுஅவர் ஜார் மன்னனைப் போல் ஆட்டம்போட்ட காரணத்தினுல்தான் வெளியேறநேர்ந்தது. தென்னுட்டுக் காந்தியான அறிஞர் அண்ணா அவர்களை ஜார் மன்னனுக்கு ஒப்பிடும் துரோகி சம்பத்தை தென்னுட்டுக் கோட்ஸே என்று அழைக்கலாம்.

கே: 17-2-63 தென்னகத் தலைவன் நாலாம் பக்கத்தில் ஒரு அசிங்கத்தைப் பற்றி எழுதப் போவதாக விளம்பரம் செய்திருந்தீர்கள். அந்த வார இதழ் பார்த்தேன் அப்படி ஒன்றும் காணுேமே? ஏன் எழுதவில்லை? பயமா?

எ. ஜான்வர்கீஸ்
சென்னை-6.

ப: 17-2-63 தென்னகத் தலைவன் நாலாம் பக்கத்தில்

## வணங்காமுடி பதில் தருகிறார்

இடம் பெற்றுள்ள தூரத்துச் சனியன் கட்டுரையைப் படியுங்கள். அதில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள கரீம் பிறவிதான் அசிங்கப் பிறவி.

கே: போர்க்காலம் முடியும் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ள திராவிட நாடு பிரச்சினையை எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்வது குறித்துத் தங்கள் கருத்தென்ன?

எஸ். எஸ். மணி
திருவனந்தபுரம்.

ப: நம்மைக் கேலி செய்கிறவர்கள் நாட்டின்மீது அக்கறை இல்லாதவர்கள்! அந்நியனுக்கு இந்தியத் துணை கண்டத்தின் எல்லையை விலை பேசுகின்ற விஷப் பாம்புகள்! நம் கவனத்தை திசை திருப்பி விடுவதன் மூலம் அரசியலில் லாபத்தை எதிர்பார்த்துக் கிடக்கும் மோசடிக்காரர்கள்! கேலி பேசுவோர் கிடக்கட்டும். சீன அபாயம் முடிந்ததும் நாம் யார் என்பதை அவர்கள் தெளிவாகப்புரிந்துகொள்வார்கள். அதுவரை அடக்கமாக இருப்பதே நமது கடமை.

கே: அறிஞர்அண்ணாஅவர்கள் மாவட்டவாரியாகச்சுற்றுப் பயணம் செய்யப் போவதாக சில தின ஏடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றனவே உண்மையா?

டி. ஆர். ரஞ்சிட்ராய்
நாகர்கோவில்.

ப: நமது கழக நாளேடுகளான 'நம்நாடு' 'முரசொலி'யில் அது பற்றிய அதிகாரப் பூர்வமான செய்தி வந்தால் அதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

கே: கம்யூனிஸ்டுகளைப் பற்றியே அதிகம் எழுதுகிறீர்களே?

அ. செல்வம்
பம்பாய்.

ப: கம்யூனிஸ்டுகளின் பழைய கொலைகாரச் சரித்திரம் தென்னுட்டு மக்களுக்கு முழுமையாகத் தெரியாது! கம்யூனிஸ்டுகளின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியும் நம்மை அந்நியனுக்கு அடிமைப் படுத்த இழுத்துச் செல்வதாகும். அவர்களின் போலி வேடத்தைக் கலைத்து உண்மை சொரூபத்தை ஆதாரத்துடன் காட்டித்தீர வேண்டிய கடமையில் நாம் ஈடுபட்டுள்ளோமே தவிர அதுவே வேலையல்ல.

கே: தங்கக் கட்டுப்பாடு பற்றி கம்யூனிஸ்ட் கட்சியில் இரண்டுவிதக் கருத்து உலவுகிறதே; ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி இப்படி முரண்பாடு இருக்கலாமா?

ஆக. சேதுராமன்
பண்ருட்டி.

ப: கம்யூனிஸ்டுகளுக்கு இரண்டு நாக்குகள் இருப்பதைப் போல - எந்தப் பிரச்சினைக்கும் அவர்களிடம் இரண்டு கருத்து இருக்கும். ஒன்று கட்சிக்காரனைத் திருப்திபடுத்த— மற்ருென்று மக்களை திருப்திபடுத்த! சீனப் படையெடுப்புப் பிரச்சினையில் ஒரு கோஷ்டி சூ-யென்-லாயை ஆதரித்தது, இன்னெரு கோஷ்டி நேருவை ஆதரிப்பது போல் நடித்தது. இவ்வளவு நடைபெற்றும் கூட இன்னும் வங்காளக் கம்யூனிஸ்ட் கட்சி சீனு செய்வதே நியாயம் என்கிறது. 'அப்படிச்சத்தம் போட்டுச் சொல்லாதடா பாவி' என்று பல்லை நரநரவென்று கடிக்கிறது தில்லிக் கம்யூனிஸ்ட் கட்சி. உலகத்தில் சீனுவை ஆதரிக்கும் கோஷ்டி ஒன்று மாஸ்கோவை ஆதரிக்கும் கோஷ்டி மற்ருென்று. ஸ்டாலின் பக்கம் ஒரு கும்பல்—லெனின் பக்கம் மற்ருெரு கும்பல் இப்படி எங்கேதேடினுலும்இரண்டு கோஷ்டி, இரண்டுகருத்து இருக்கிறதே தவிர ஒரே எண்ணம்-ஒரே கருத்துகம்யூனிஸ்ட் கட்சியில் கிடையவே கிடையாது. இப்பொழுது அவர்கள் அரிவாள் பக்கம் ஒரு கோஷ்டியும்—சுத்தியல் பக்கம் ஒரு கோஷ்டியுமாகப் பிரிந்து நிற்கிருர்கள். மக்கள் எந்தப் பக்கம் தலையைக்காட்டினுலும் ஆபத்துதான்.

கே: சென்னையில் சம்பத் கட்சி வளர்ந்திருக்கிறதா? பிழைத்துக்கொள்ளுமா?

சி. ஆர். அந்தோணி
சாத்தூர்.

ப: திருவிழாக் கூட்டங்களில் பரபரப்பாகத் திரியும் பிட்பாக்கெட் காரர்களைப் போல் சென்னைத் தெருக்களில் சில த. தே. க. ஜென்மங்கள் நடமாடிக் கொண்டிருக்கின்றன. மக்கள் ஆதரவு கொஞ்சமும் இல்லாத அனுதைக்கட்சி அது. மிகக்குறுகிய நாளில் புதை குழிக்குப் போக தயாராக இருக்கும் கட்சியும் அதுதான்.


## வீரகேசரி மாத்திரை

நித்திரையில் ஜீவசக்திகள் வெளியாவதைத் தடுத்து நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து, ஜீவசக்தியை அதிகப்படுத்தி நீடித்து இருக்கவும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சிறந்த மாத்திரை. (அனுபவமுள்ளது— நற்சாக்ஷிகள் பெற்றது)

24—மாத்திரை ரூ. 6—00
50—மாத்திரை ரூ. 12—00

(தேவைக்கு எழுதவும்):—சித்த வைத்திய பண்டிட்

**S. V. R. கண்டர். R. I. M. P.**

அரிசிப்பாளையம். வீ பஜார். P-O (சேலம்)

Regd No : M 7640 | விலை 16 காசு

பார்த்த படம்

# கலைச்சோலை

தேவர் பிலிம்ஸ்

## தர்மம் தலைகாக்கும்

தேவர் பிலிம்சாருக்கு ஒரு முத்திரை உண்டு. அவர்கள் குறுகிய காலத்தில் வெற்றிப் படங்களையே தயாரிப்பார்கள் என்பது.

"தர்மம் தலைகாக்கும்" அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

சமுதாய விரோதிகளை ஒழித்துக்கட்டும் கடமையும், பொது நலத் தொண்டும் குறிக்கோளாகக் கொண்ட ஒரு டாக்டர்.

காதல், கல்யாணம் எதுவாக இருந்தாலும் அதில் அந்தஸ்து கௌரவம் இருக்க வேண்டும் என்று தன் குடும்பத்திற்கு உபதேசித்துவிட்டு - தன்னளவில் அதைக் காற்றில் பறக்க விட்டுப்பின் அதனால் ஏற்பட்ட பயங்கரச் சூழ்நிலைக்குத் தன் குடும்ப அந்தஸ்தையே பலி கொடுக்கத் தயாராய் நிற்கும் ஒரு சீமான்.

தன் தங்கையின் வாழ்வைக் கெடுத்து அவள் சாவுக்குக்காரணமாய் அமைந்தவனைப் பழி வாங்கப் புறப்படும் அண்ணன். இவர்கள் மூன்று பேரையும் மையமாக வைத்துக் கதை பின்னப்பட்டிருக்கிறது.

உண்மை முகமூடி மனிதன் ஒருவனிருக்க அவனைப்போல் வேடமிட்ட ஓர் முகமூடி மனிதனைப் பாதியிலே காட்டி அந்த முகமூடி ரகசியத்தை விளக்கமில்லாமல் வெளிப்படுத்திவிடுவதால் இடைவேளைக்கு முன்பிருந்த விறுவிறுப்பு சற்று குறையத்தான் செய்கிறது.

டாக்டர் சந்திரனாக வரும் எம். ஜி. ஆர். ஒவ்வொரு காட்சியிலும் சிறப்பாக நடித்துள்ளார். பஸ்ஸில் சரோஜாதேவியிடம் அவர் செய்யும் குறும்பு. பாதையில் "எம் பின்னாலேயே ஏம்மா வர்றே" என்னும் கிண்டல். டெலிபோன் காதல் காட்சி, பெண் கேட்க வந்த இடத்தில் கூச்சத்தால் அவர் தவிக்கும் தவிப்பு ஆகிய இடங்களில் ரசித்துச் சுவைக்கும்படியாக உள்ளது அவர் நடிப்பு.

டாக்டர் வீட்டில் எம். ஜி. ஆரும் அசோகனும் மோதிக் கொள்ளும் கட்டம் பிரமாதம்.

எம். ஆர். ராதா கத்தாமல் நடித்திருக்கும் படம் இது. ஜெமினி சந்திராவைக் கண்டு ஆரம்பத்தில் குழையும் காட்சியிலும், 'சாயங்காலம் வர்றேன்' என்று கண் சிமிட்டும் கட்டத்திலும் 'எது என் குடும்பமின்னு தெரியலியே' என்று அவர் சாதுவாக ஒடுங்கும் போதும் ராதா நடிப்பின் சிகரத்தில் நிற்கிறார்.

பசுவாக அறிமுகப்படுத்தப்படும் அசோகன் புலியாகச் சீறும்போதும், எம். ஜி. ஆருடன் கட்டிப் புரண்டுவிட்டு நட்பைக் காட்டி போலி மன்னிப்புக் கேட்கும்போதும் சிறப்பாக நடித்துள்ளார்.


இது என்று குறிப்பிட்டுச் சொல்லவிடாமல் ஒவ்வொரு காட்சியிலும் சபாஷ்பெறுகிறார் சரோஜாதேவி.

ச. அய்யாப்பிள்ளை அவர்களின் வசனம் கருத்தாழமும் நகைச் சுவையும் கொண்டு சிறப்பாக அமைந்திருக்கிறது.

தேவர் படமென்றால் பாடல்கள் இனிமையாக அமையும். இதில் அது இல்லை.

படத்தின் ஆரம்பக் காட்சியின் விறுவிறுப்புக்கு டைரக்ஷன் திறமை எடுத்துக்காட்டு.

மொத்தத்தில் '**தர்மம் தலைகாக்கும்**' ஒரு சுவையான முழுக் கரும்பு.




ஆசிரியர், வெளியிடுபவர் : ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6
அச்சிடுபவர் : எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.